விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 13 செவ்வாய்க்கிழமை (26.05.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 159

## கொரோனா பலி
## 10 ஆக உயர்வு
### குவைத்திலிருந்து நாடு திரும்பிய பெண்ணே மரணம்

(கொழும்பு)

குவைத்திலிருந்து அண்மையில் நாடு திரும்பிய பெண் ஒருவர் கொரோனா வைரஸ் காரணமாக நேற்று உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இலங்கையில் 10 ஆக உயர்வடைந்துள்ளது.

குவைத்திலிருந்து நாடு திரும்பிய திருகோணமலை மங்கி ப்ரிட்ஜ் இராணுவ தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 51 வயதுடைய பெண் ஒருவரே ▶15

## நாடு முழுவதும் இன்று முதல் ஊரடங்கு தளர்வு
### தினமும் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரை மட்டுமே அமுல்

(கொழும்பு)

நாடு முழுவதும் இன்று முதல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுவதாக ஜனாதிபதி ▶15

## மோ.சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர்
### சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா, புகையிரத நிலைய வீதியில் இடம்பெற்ற மோட்டர் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

கடந்த 15ஆம் திகதி வவுனியா, குருமன்காடு ▶15

## துன்னாலையில் வாள்வெட்டு
### பெண் படுகாயம்

(கரணவாய்)

உறவினர்களுக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பு வாள்வெட்டாக மாறியதில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலை ▶15

### பொதுத் தேர்தலை பிற்போடும் நோக்குடன்
## தேர்தல்கள் ஆணைக்குழு செயற்படவில்லை
### கொரோனா அச்சுறுத்தல் தொடர்பில் சுகாதாரத்துறையினருடன் கலந்துரையாடி வருகின்றோம் – மகிந்த தேசப்பிரிய



(கொழும்பு)

பொதுத் தேர்தலை பிற்போடும் நோக்குடன் தேர்தல்கள் ஆணைக்குழு செயற்படவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மேலும் கொரோனா அச்சுறுத்தல் தொடர்பில் சுகாதார துறையினரிடம் தொடர்ந்து கலந்துரையாடி வருவதாகவும் சுட்டிக் காட்டினார். (15ஆம் பக்கம் பார்க்க)

### எதிர்பாராத விதமாக
## கழுத்தில் கயிறு இறுகியதால்
### லண்டனில் சிறுமி மரணம்



▶15

### தாக்குதல் ஒன்றுக்கு தயாராகியிருந்த
## வன்முறைக் கும்பலை சேர்ந்த மூவர் உடுவிலில் கைது
### வாள்கள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வாள்கள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்களுடன் தாக்குதல் ஒன்றுக்கு தயாராகவிருந்த வன்முறைக் கும்பல் ஒன்றைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். ▶15

### கொரோனா தனிமைப்படுத்தல் முகாம்களிலிருந்து
### நோயாளர்களாக அடையாளம் காணப்படாதவர்களால்
## சமூகத்தில் வைரஸ் பரவும் அபாயம்
### வைத்திய பரிசோதனை மையம் எச்சரிக்கை

(கொழும்பு)

கொரோனா தனிமைப்படுத்தல் முகாம்களிலிருந்து நோயாளர்களாக அடையாளம் காணப்படாத நபர்களால் கூட பின்னர் சமூகத்தில் கொரோனா வைரஸை பரப்பக்கூடிய அச்சம் காணப்படுவதாக சுகாதார அமைச்சின் வைத்திய பரிசோதனை ▶15

## நேற்றும் 41 பேருக்கு கொரோனா தொற்று
### இலங்கையில் திடீரென அதிகரித்த தொற்றாளர்கள்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 41 பேர் நேற்று ▶15

## நடிகையை பார்க்க இந்தியா அழைத்துச் செல்லாததால்
### விபரீத முடிவெடுத்த யாழ் யுவதி மரணம்



(யாழ்ப்பாணம்)

தென்னிந்திய சின்னத்திரை நடிகையை பார்க்க இந்தியா அழைத்து செல்லவில்லை என்ற மன விரக்தியில் ▶15

## புலி ஆதரவாளர் சிங்கம்பட்டி ஜமீன்தார்
### காலமானார்

(சென்னை)

தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு பயிற்சி முகாம்கள் அமைக்க இடம் கொடுத்து உதவ முன் ▶15

# உணவுப் பொதியின் விலை அதிகரிக்கக்கூடும்

## நுகர்வோர் அதிகார சபை

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து உணவுப் பொதி ஒன்றின் விலையும் அதிகரிக்கக் கூடும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

சீனி, பருப்பு, கிழங்கு உலர்ந்த மிளகாய், ரின்மீன் போன்றவற்றுக்கான விசேடவர்த்தக வரி கடந்த வெள்ளிக்கிழமை அதிகரிக்கப்பட்டது.


அத்துடன் அப்பிள், திராட்சை, தோடை, பேரீச்சம்பழம், மரமுந்திரிகை, சோளம், மாஜரீன், வாசனைத் திரவியங்கள் மற்றும் எண்ணெய் வகைகள் உள்ளிட்ட பல பொருட்களின் விசேட வர்த்தக வரியும் அதிகரிக்கப்பட்டது. அதிகரிக்கப்பட்ட வர்த்தக வரிக்கமைய உணவுவகைகளின் விலையை உயர்த்த வேண்டிய தேவையுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெிவிக்கையில், சிற்றுண்டிச் சாலைகளை இன்று திறந்தாலும் கடந்த வெள்ளிக்கிழமை அதிகரிக்கப்பட்ட வர்த்தக வரிக்கமைய உணவு வகைகளின் விலையை உயர்த்த வேண்டிய தேவையுள்ளது.

இதற்கமைய குறிப்பாக உணவுப் பொதியொன்றின் விலையை அதிகரிக்க நேரிட்டுள்ளது. இதன்படி மரக்கறி ரொட்டி, ரோல்ஸ், கிழக்கு ரொட்டி, பற்றீஸ், கொத்து, பரோட்டா, முட்டைரொட்டி, பிரைட்ரைஸ் உள்ளிட்ட ஹோட்டல்களில் தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களினதும் விலைகளை உயர்த்துவதற்கு நேரிட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,8)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு :
021 221 7603 / 021 567 1532

# கொரோனா இடர்காலத்தை கருத்தில்கொண்டு



**வடக்கு மாகாண கல்வி அமைச்சும் வலம்புரியும் இணைந்து வழங்கும் மாணவர்களுக்கான கல்விச் சேவை**

**ஆரம்பம் : 27.05.2020 புதன்கிழமை (நாளை)**

**திங்கள் முதல் வெள்ளி வரை**

**மாதிரிவினாத் தாள்கள் :**
- தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை
- க.பொ.த. (சா.த) பரீட்சை
- க.பொ.த. (உ.த) பரீட்சை

**மாதிரி வினாத்தாள்களின் இணைப்பு வலம்புரி நாழிதமுடன்**

## இயற்கைப் பசளை (ORGANIC) வீட்டுத் தோட்டம்

எமது ஸ்தாபனத்தின் மூலமாக வட மாகாணம் முழுவதும் இரசாயனக் கலப்பற்ற இயற்கைப் பசளைகள் மூலமாக வீட்டுத் தோட்டம் ஒவ்வொரு வீட்டிலும் அனைவராலும் பங்குபற்றி பயன் பெறக்கூடிய வகையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.



**இவ் உற்பத்தியில் பங்குபற்றுவதன் மூலம் குறைந்த செலவில் நிறைவான பயனைப் பெற முடியும். மாதாந்தம் 20,000 ரூபாவிலிருந்து உங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும்.**

எமது ஸ்தாபனத்தினால் பின்வரும் பொருட்களை குறைந்த விலையில் வழங்கி உங்கள் அனைவரையும் இத்திட்டத்தில் ஈடுபட ஊக்குவிக்குகின்றோம்.

<u>எமது ஸ்தாபனத்தினால் வழங்கப்படும் மூலப்பொருட்கள் பின்வருமாறு:-</u>

1. இரண்டு விதமான அதி உச்ச பயனைக் கொடுக்கும் இயற்கை உர வகைகள்
2. மரக்கறி நாற்றுக்கள், செடிகள் (தக்காளி, கத்தரி, கறிமிளகாய், வெண்டி, பாவற்காய், பச்சை மிளகாய், பூசணிக்காய்)
3. பயிரை வளர்ப்பதற்கான இரசாயனக் கலப்பற்ற பைக்கற்றுகள்

மேலே குறிப்பிட்ட சகல விதமான மூலப் பொருட்களையும் கொள்வனவு செய்வதற்கு நாம் அறவிடும் கட்டணம்

ஒரு பைக்கற்றுக்கு **100/=** மட்டுமே

மேற்குறிப்பிட்ட இத்திட்டத்தில் பங்குபற்றி இரசாயனக் கலப்பற்ற உணவினை உண்டு நீண்ட காலம் சுகதேகிகளாக வாழுங்கள்.

மேலதிக தொடர்புகளுக்கு:-

**வறுமை ஒழிப்பு சமூக நல அமைப்பு**

தொ.பே:- 076 167 6824, 076 769 9191

(எமது நிறுவனம் கனடாவிலும் இலங்கையிலும் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும்)

(C-9622)

# மரண அறிவித்தல்



## திருமதி பட்டுலிங்கம் சிவமணி

*கரணவாய் அண்ணாசிலையடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பட்டுலிங்கம் சிவமணி அவர்கள் 25.05.2020 திங்கட்கிழமை அன்று காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சீதேவி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சீதேவி தம்பதியினரின் பாசமிகு மருமகளும், கணபதிப்பிள்ளை பட்டுலிங்கம் (தவில்) அவர்களின் பாசமிகு மனைவியும், தமிழ்வாணி, முகுந்தினி (சுவிஸ்), சிவரூபன் (பிரான்ஸ்), பிறேம்நாத் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேந்திரன் (பாபு), பரா (சுவிஸ்) நந்தினி (பிரான்ஸ்), துளசி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து, தவராசா, ஆனந்தராசா, ரஞ்சலிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பூமணி, சீவரத்தினம், சுலோசனா, காலஞ்சென்ற ரஞ்சனாதேவி ஆகியோரின் சகோதரியும், மதுரா, மதுஷாலினி, மாலவன், ஹரினி, அஞ்சனா, சரண்ஜன், அத்விதா, சுபிக்சன், அக்ஷயன், சாகித் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2020) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் வெல்லன்கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

**அண்ணா சிலையடி,
கரணவாய்.**

(C-9619)

**தகவல் : குடும்பத்தினர்
077 508 6127**

# அதிகாரத்திற்கு ஆசைப்பட்டவர்களால் ஒதுக்கப்பட்டார் சஜித் பிரேமதாஸ

## நளின் பண்டார சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கட்சி அதிகாரத்திற்கு ஆசைப்பட்டே, திட்டமிட்ட வகையில் சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஒதுக்கப்பட்டார் என சஜித் ஆதரவாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், அரசாங்கத்தின் தேவைகளும் ரணில் விக்கிரமசிங்க தரப்பினரின் தேவைகளும் என்ன என்பது நன்றாகத் தெரிகிறது.

தங்களின் கட்சிகளில் அதிகாரத்துக்கு வரவே இந்த இரண்டு தரப்பினரும் முயற்சித்து வருகிறார்கள். சஜித் பிரேமதாஸவை ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேற்றினார்கள்.

இதற்கு மூளையாக இருந்து செற்பட்டவர்கள், இன்று கட்சியின் உயர்பதவிகள் தங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கொண்டு வருகிறார்கள்.



நாம் இவ்வாறானவர்கள் தொடர்பாக ஏற்கனவே தெரிவித்திருந்தோம்.

இவர்களின் முகத்திரையைக் கிழித்துத்தான் நாம் சிறிகொத்தாவிலிருந்து வெளியேறினோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# குணமடைந்தோர் 695

(கொழும்பு)

நாட்டில் மேலும் 21 கொரோனா தொற்றாளர்கள் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நிலையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி இலங்கையில் இதுவரை குணமடைந்தோரின் எண்ணிக்கை 695 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட 313 கடற்படையினர் குணமடைந்துள்ளதாக கடற்படை ஊடகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இதுவரை உறுதிப்படுத்தப்பட்ட கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 141 ஆகும்.

இந்நிலையில், கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள 437 பேர் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சைபெற்று வருகின்றனர். 97 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் கொரோனா தொற்றுக்கு இலக்காகி இலங்கையில் 9 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# போதைப் பொருட்களுடன் 343 பேர் கைது

(கொழும்பு)

போதைப்பொருட்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் மாத்திரம் 343 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் மேல் மாகாணத்தில் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து ஹெரோயின், கஞ்சா, ஐஸ் உள்ளிட்ட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. (ஐ-8)

# 150 கைதிகள் பூஸா சிறைக்கு

(கொழும்பு)

சிறு குற்றங்களின் அடிப்படையில் கொழும்பு சிறைச்சாலை, வெலிக்கடை சிறைச்சாலை மற்றும் மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 150 கைதிகளை பூஸா சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது.

இவ் விடயம் தொடர்பில் குறித்த திணைக்களம் நேற்று தெரிவிக்கையில், முதற்கட்டமாக 40 கைதிகள் அடுத்த இரண்டு வாரத்தினுள் பூஸா சிறைச்சாலைக்கு மாற்றப்படவுள்ளனர் எனத் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

# நாட்டை சிங்கள மயமாக்கவே தொல்லியல்துறை கையாளப்படுகிறது

## துரைராஜசிங்கம் சுட்டிக்காட்டு

(மட்டக்களப்பு)

நாடு முழுவதையும் சிங்கள பௌத்த தேசியவாதத்தின் பரப்புக்குள் கொண்டு வரும் வஞ்சக நடைமுறையாகவே தொல்லியல் துறை இலங்கையில் கையாளப்படுகிறது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம் சுட்டிக்காட்டினார்.

தொல்லியல்துறை தொடர்பாக அமைக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியின் தலைவராக முன்னாள் இராணுவத் தளபதி நியமிக்கப்பட்டமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "கிழக்கு மாகாணத்திலுள்ள தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் கையாளுவதற்கான ஜனாதிபதி செயலணியொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக முன்னாள் இராணுவத் தளபதி கமால் குணரட்ண நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்விடயம் பல்வேறு கேள்விகளை எழுப்புகின்றது. பொதுத் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் வேளையில் இவ்வாறான நியமனங்கள் வழங்கலாமா? எந்தவொரு நியமனமும் இக்காலத்தில் செய்யப்பட முடியாது என்பதே பொதுவான விதியாகும். காரணம் அது வாக்காளரைக் கவர்வதற்கான அனுமதிக்கப்பட முடியாத ஒரு செயல் என்பதும், இவ்வாறான விடயங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்ப முடியாதிருக்கும் என்பதுமேயாகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இவ்விடயங்கள் தொடர்பாக மிகவும் அலட்சியமாக, சட்டங்களை மதிக்காத வகையில் அல்லது அசட்டைத் துணிவோடு, குறிப்பிடப்பட்ட இக்காலத்தில் செய்யப்பட முடியாத பல செயல்களைத் தொடர்ந்து செய்த வண்ணமே உள்ளார்.

தொல்லியல் இடங்கள் தொடர்பான விடயங்கள், தொன்மங்களைக் கண்டறிதல் என்பவற்றுக்கு அப்பால் நாடு முழுவதையும் சிங்கள பௌத்த தேசியவாதத்தின் பரப்புக்குள் கொண்டு வருகின்ற வஞ்சகத்தனமான ஒரு நடைமுறையாகவே தொடர்ச்சியாகக் கையாளப்பட்டு வருகிறது. எனவே துறைசார்ந்த நிபுணர்களையே அத்துறைக்கு நியமிக்க வேண்டும் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஐ-4)

# சமூக இடைவெளியைப் பின்பற்றாதோருக்கு கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்படும்

## பிரதிப்பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை

(கொழும்பு)

பேருந்துப் பயணங்களின் போது சமூக இடைவெளியைப் பின்பற்றாது செயற்படுபவர்களுக்கு கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்படும் என பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண எச்சரிக்கை விடுத்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சுகாதார அதிகாரிகளின் பரிந்துரைக்கமைய இன்று முதல் குறித்த நடவடிக்கை கடுமையாகப் பின்பற்றப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-8)



# கால்நடை வளர்ப்போர் தொடர்பான இணைய வழி கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

கொவிட்-19 காலகட்டத்தில் கால்நடை வளர்ப்போர் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் நோக்கிலான இணைய வழிக் கலந்துரையாடல் இன்று 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் இடம் பெறும்.

யாழ்ப்பாண கல்லூரி விவசாய நிறுவக தொழிற்பயிற்சி மாணவர்களின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இக்கலந்துரையாடலில் அனுபவம் வாய்ந்த துறைசார் நிபுணர்களான சுகாதாரத் திணைக்கள கால்நடை உற்பத்தி மாகாணப் பணிப்பாளர் வைத்தியர் சி.வசீகரன், கால்நடை உற்பத்தித் திணைக்கள மேலதிக மாகாணப் பணிப்பாளர் வைத்தியர் க.ரகுநாதன் ஆகியோர் கலந்துகொண்டு கால்நடை வளர்ப்போர் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும், அவற்றுக்கான தீர்வு தொடர்பாகவும் இணையத்தில் கலந்துரையாடவுள்ளனர். (ஐ-30)

# முன்னாள் ஜனாதிபதியுடன் உறவு; கட்சிக்குள் மோதல்-ரவி குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியுடன் உறவாடி இருந்துவிட்டு, ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிரச்சினையை ஏற்படுத்த சிலர் முயற்சித்தார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க குற்றம்சாட்டினார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இத்தகை செயற்பாடுகளால் என்ன இலாபம் கிடைத்தது. ஐக்கிய தேசியக் கட்சி என்பது பழைமைவாய்ந்த ஒரு கட்சியாகும். டி.எஸ்.சேனநாயக்க, டட்லி சேனநாயக்க, ஜே.ஆர்.ஜயவர்த்தன போன்றோர் வளர்த்தெடுத்த கட்சியாகும்.

இதனை நாம் பாதுகாக்க வேண்டும். ஆனால், சிலர் கட்சியை பிளவுபடுத்தவே முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக பொய்யான கருத்துக்களை சமூகத்தில் பரப்புகிறார்கள். கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஏகாதிபத்தியவாதி எனக் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

ஆனால், அவர் உண்மையாக ஏகாதிபத்தியவாதியாக செயற்பட்டிருந்தால் கட்சிக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. அவர் அனைவருக்கும் சுதந்திரம் அளித்த தலைமையின் விளைவையே இன்று கட்சி அனுபவித்து வருகிறது.

எனினும், கட்சிக்குள் இவ்வாறான பிரச்சினைகள் வருவது இயல்பான ஒன்றாகும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும் இவ்வாறு இடம்பெற்றுள்ளது. இவை அனைத்தையும் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள்தான் தீர்ப்பை வழங்குவார்கள்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# எதிர்வரும் மூன்று வாரங்களில் கொரோனா தீவிரமடையும் அபாயம்

## அனில் ஜாசிங்க எச்சரிக்கை



**(கொழும்பு)**

**நாட்டில் சுகாதார நடவடிக்கைகளை சரியான முறையில் பின்பற்றவில்லை என்றால் அடுத்த 3 வாரங்களில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடையும் எனச் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க எச்சரித்துள்ளார்.**

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றிற்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் நடவடிக்கைகளை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என அரசாங்கத்திடம் தான் அறிவித்த போதிலும் தனிமைப்படுத்தல் சட்டத்தை வலுப்படுத்தல், மக்கள் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு திருப்பும் நடவடிக்கை, உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை என்றால் 3 வாரங்களில் கொரோனா வைரஸ் மீண்டும் தலைதூக்கும்.

அப்படி தலைதூக்கினால் தேர்தல் மாத்திரமல்ல ஒன்றையும் செய்ய முடியாது. தேர்தல் நடவடிக்கையை முன்னோக்கிக் கொண்டு செல்வது தொடர்பில் சுகாதார அதிகாரி என்ற ரீதியில் அதற்கான வாய்ப்புகளையே நான் கூறினேன்.

முழுமையாக கொரோனாவைக் கட்டுப்படுத்தி விட்டோம் என நான் கூற மாட்டேன். எனினும் இதே முறையில் சென்றால் எங்களால் கட்டுப்படுத்த முடியும்.

சில அரசியல்வாதிகள் அதை திறவுங்கள், இதை திறவுங்கள் என்று கூறுகின்றார்கள். எனினும் எங்கள் பணியை செய்ய விடுங்கள். நாங்கள் அவற்றினைச் சரியாகச் செய்வோம் என அவர் மேலும் உறுதிபடத் தெரிவித்தார். (ஜ-4)

## ஒரு சூலில் 3 குழந்தைகள்

(வெலிசர)

வெலிசர கடற்படை முகாமில் இருந்து ஒலுவில் தனிமைப்படுத்தல் முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்ட பெண் ஒருவர் 3 குழந்தைகளை பிரசவித்துள்ளார்.

அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குறித்த பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள் பிறந்துள்ளன. கடற்படைச் சிப்பாயின் மனைவிக்கே இவ்வாறு 3 குழந்தைகள் பிறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


## காப்புறுதித் திட்டம்

(கொழும்பு)

சுற்றுலா வழிகாட்டிகளுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்றினை வகுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. குறித்த விடயம் தொடர்பில் சுற்றுலா மற்றும் விமான சேவைகளுக்கான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இந்த அறிவுறுத்தலை வழங்கினார். (ஜ-4)

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு:- 17.12.1950
இறப்பு:- 23.05.2020

அமரர். திருவாளர்

**க.வ.சிவச்சந்திரதேவன்**

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் ஸ்தாபகரும் முன்னைநாள் செயலாளரும் தற்போதைய தலைவருமாகிய திருவாளர் க.வ.சிவச்சந்திரதேவன் 23.05.2020 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் புலோலியை பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி, கொழும்பை வதிவிடமாகவுள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

வடமராட்சி சுருக்கெழுத்து கழகம்,
வதிரி, கரவெட்டி.

(C-9618)

# இராசிபலன்

26.05.2020
வைகாசி 13, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 11.55 மணிவரை
திருவாதிரை காலை 6.29 மணிவரை
சுபநேரம் 10.22-11.52 மணிவரை
இராகுகாலம் 2.52-4.22 மணிவரை
சந்திராஷ்டமம்- கேட்டை
சதுர்த்தி விரதம்

வளவன்

**மேஷம்**: உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**ரிஷபம்**: பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு.

**மிதுனம்**: மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்**: ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**சிம்மம்**: பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு, உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், கௌரவமான நாள்.

**கன்னி**: செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், தூர தேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**துலாம்**: பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ரோக பயமுண்டு.

**விருச்சிகம்**: குடும்பத்தில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், போசனசுகக் குறைவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு உறக்கம் குறையலாம்.

**தனுசு**: சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், செய்தொழிலில் முன்னேற்றமுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மகரம்**: கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், உடல் நலன் சீராகும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**கும்பம்**: புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**மீனம்**: மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

விசுவாசமே பணத்தினும் மதிப்பு வாய்ந்தது

# டெங்கு-எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் சுகாதாரத் துறையினர் எச்சரிக்கை

(கொழும்பு)

டெங்கு மற்றும் எலிக்காய்ச்சல் நோய்கள் தொடர்பில் பொது மக்கள் கூடுதல் அவதானத்துடன் இருக்க வேண்டும் என சுகாதாரப் பிரிவு மீண்டும் அறிவுறுத்தியுள்ளது.

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் காணப்படுகின்றது.

வயல் நிலங்களில் பணிகளை ஆரம்பிக்கும் முன்னர் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென விசேட வைத்தியர் ஆனந்த விஜய விக்ரம தெரிவித்தார். இது தொடர்பில் கொழும்பில் நேற்றைய தினம் ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

டெங்கு நோயாளர்கள் மற்றும் எலிக்காய்ச்சல் நோயாளர் சிலர் பதிவாகியுள்ளனர். இரண்டு நாட்களுக்கு மேலாக காய்ச்சல் நீடித்திருப்பின் வைத்திய உதவிகளைப் பெற வேண்டியது கட்டாயமாகும்.

நோய்களை ஆரம்பத்திலேயே இனம்கண்டால் அதைக் குணப்படுத்துவது இலகுவானது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# 141 பொலிஸார் தனிமைப்படுத்தல்


(கல்லடி)

விடுமுறையில் வீடுகளுக்குச் சென்று திரும்பிய மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 141 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தனிமைப் படுத்தப்பட்டனர்.

கல்லடி பொலிஸ் பயிற்சி முகாமில் அவர்கள் நேற்று திங்கட்கிழமை முதல் 7 நாட்களுக்கு தனிமைப்படுத்தப்படவுள்ளனர் என பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றிவரும் பொலிஸ் உயர் அதிகாரி தொடக்கம் சாதாரண பொலிஸ் உத்தியோகத்தர் வரையில் இவ்வாறு தனிமைப் படுத்தப்பட்டனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# வைத்திய பரிசோதனை மேற்கொள்ள இலங்கை வந்த சீஷெல்ஸ் பிரஜைகள்



(விக்ரோறியா)

சீஷெல்ஸ் நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்தவர்கள், இலங்கைப் பிரஜைகள் அல்ல எனவும் அவர்கள் 35 பேரும் சீஷெல்ஸ் நாட்டுப் பிரஜைகள் எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று அபாயம் காரணமாக இலங்கை வர முடியாதிருந்த 35 இலங்கை பிரஜைகளை சீஷெல்ஸ் நாட்டிலிருந்து, கடந்த 23 ஆம் திகதி விசேட விமானத்தின் மூலம் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், இவ்வாறு சீஷெல்ஸ் நாட்டிலிருந்து அழைத்து வரப்பட்டவர்கள் இலங்கைப் பிரஜைகள் அல்ல. 35 சீஷெல்ஸ் பிரஜைகளை இலங்கையில் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்த அனுமதி தருமாறு அந்நாடு, இலங்கை அரசாங்கத்திடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே சீஷெல்ஸ் பிரஜைகள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

முன்னதாக பங்களாதேஷ் நாட்டிலிருந்து 276 இலங்கைப் பிரஜைகளும், 35 சீஷெல்ஸ் நாட்டுப் பிரஜைகளுமாக 311 பேர் கடந்த 23 ஆம் திகதி சனிக்கிழமை இரவு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்ப கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெற்ற மாணவர்களின் அனுமதிக்கான விண்ணப்பங்களை, உறுதி செய்வதற்காக கடந்த வாரம் வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக இம்மாதம் 27, 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் இதற்கான சந்தர்ப்பத்தைத் வழங்குமாறு அனைத்து பாடசாலைகளினதும் அதிபர்கள் உள்ளிட்டோரை கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், தற்போதைய நிலைமைகளை கருத்திற்கொண்டு, சுகாதார அதிகாரிகளின் பரிந்துரைகளுக்கு அமைய, சுகாதார பாதுகாப்பு முறைகளை பின்பற்றி, குறித்த பாடசாலையின் அதிபர் அல்லது உதவி அதிபரினால், தமது பாடசாலையில் உயர்தரத்தில் சித்தியடைந்து, பல்கலைக்கழங்களுக்கு தகுதி பெற்ற மாணவர்களின் விண்ணப்பங்களை உறுதிப்படுத்த வேண்டும் என, கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஜ-4)


## மணிவிழா வாழ்த்து

திருமதி மல்லிகாதேவி மகேந்திரன்

(Sci. Tra, SLTS-I)

சேவை விபரம்

யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்
1989.02.01-1993.02.01
பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை
1993.02.02-1994.12.31
யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியாலயம்
1995.01.01-1998.10.17
யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்
1998.10.18-2001.02.15
யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்
2001.02.16-2010.06.15
யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்
2010.06.16-2013.03.22
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்
2013.03.25-2020.05.25

Congratulations

எமது பாடசாலையில் 25.05.2020 அன்று மணிவிழாக் காணும் ஆசிரியரை பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம். (C-9616)




# கொழும்பில் ஹோட்டல்களை திறப்பதற்கு அனுமதி

(கொழும்பு)

சுற்றுலாத் துறையின் கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து ஹோட்டல்களுக்கும் உணவகங்களுக்கும் இன்று (செவ்வாய்க்கிழமை) முதல் சேவைகளை மீண்டும் ஆரம்பிக்க அனுமதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயத்தை கொழும்பு மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ருவன் விஜேமுனி அறிவித்துள்ளார்.

அந்தவகையில் சுகாதார மற்றும் பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றி சேவைகளை மீண்டும் ஆரம்பிக்க அனுமதி என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஹோட்டல் மற்றும் உணவகங்கள் மீண்டும் தொடங்கியவுடன் சுகாதார மற்றும் பாதுகாப்பு விதிமுறைகளை கடைப்பிடிக்கின்றனரா? என்பதை ஆய்வு செய்வதற்கு ஆறு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-8)


## 32 வருடகால சிரேஷ்ட ஆசிரிய சேவையாற்றி 11.04.2020 இல் ஓய்வு பெற்ற மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்




ஆசிரியர் பணியை திறம்பட ஆற்றி ஓய்வு பெறும் ஆசிரியை
திருமதி. பரமலக்சுமி பாலச்சந்திரன்
(SLTS-I Maths Special Trained)
அவர்களின் மணிவிழா நாளில் அவர்களுக்கு பிறந்தநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஓய்வுக் காலம் சிறப்பாகவும், நலமாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்

| | |
|---|---|
| யா/பாலாவோடை இ.த.க.பாடசாலை,காரைநகர் | 17.08.1988-04.02.1991 |
| யா/பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை | 05.02.1991-31.12.1992 |
| யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை | 01.01.1993-31.12.1995 |
| கிளி/செல்வாநகர் அ.த.க பாடசாலை | 01.01.1996-22.11.1996 |
| மு/மாங்குளம் மகா வித்தியாலயம் | 23.11.1996-30.04.1997 |
| யா/தெல்லிப்பளை யூனியன் கல்லூரி | 01.05.1997-19.01.1999 |
| யா/இந்து மகளிர் கல்லூரி | 20.01.1999-06.06.2010 |
| யா/பரஞ்சோதி வித்தியாலயம் | 07.06.2010.-23.01.2011 |
| யா/கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வி. | 24.01.2011-11.04.2020 |

"வாழ்க வாழ்கவென வாழ்த்துவோர்"
ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி. (C-9616)

# எமது அடையாளங்களை அழித்தொழித்து சிங்கள மயமாக்கலை புகுத்துகிறது அரசு

## தமிழ்த் தேசிய பண்பாட்டு பேரவை காட்டம்

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் சார்ந்த இடங்களை அடையாளம் கண்டு அவற்றைப் பாதுகாப்பதற்கு இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தலைமையில் ஜனாதிபதி செயலணி ஒன்று அமைக்கப்படும் என்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவிப்பு தொடர்பில் கடும் எதிர்ப்பையும், அதிருப்தியையும் தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவை வெளியிட்டுள்ளது. நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையிலே மேற்கண்டவாறு வெளியிடப்பட்டுள்ளது.

தமிழர் தாயகத்தின் ஒரு பகுதியான கிழக்கு மாகாணத்தில் எமது தமிழ் இனத்தின் விடுதலைக்கான போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின் கடந்த 10 ஆண்டுகளாக இலங்கையின் தொல்பொருள் திணைக்களம் தமிழர்களின் வரலாற்றுத் தொன்மைகள், தொன்மைச் சான்றுகளை அழித்து பௌத்தமயமாக்கலை துரிதமாக செய்து வருகின்ற சூழ்நிலையில் ஜனாதிபதியின் இந்த அறிவிப்பானது ஒரு சில விடயங்களை மிகத் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது. தமிழர்களின் பூர்வீகப் பகுதிகளை இனம் கண்டு அங்கிருக்கும் எமது வரலாற்று தொல்லியல் ஆதாரங்களை அழித்து அவ்விடத்தை பௌத்த மயப்படுத்தி எம் நிலத்தை சூறையாடுவதுடன் கிழக்கில் தொல்லியல் சார்ந்த இடங்களை இனம்கண்டு அவற்றைப் பாதுகாப்பதற்கு முன்னாள் இராணுவ அதிகாரியாக இருந்த ஒருவரை நியமித்து அவர் தலைமையில் ஜனாதிபதி செயலணி ஒன்றை அமைத்தல் என்பது மீண்டும் தமிழ் மக்களை அடக்கி, ஒடுக்கி எமது தாயகப் பகுதிகளில் இராணுவ பிரசன்னத்தை அல்லது இராணுவ ஆட்சியை திரை மறைவில் ஏற்படுத்தும் ஒரு பாரிய திட்டமாகவே கருதமுடிகின்றது.

இலங்கையின் சிங்கள பௌத்த இனவாதிகள் தொல்லியல் திணைக்களம் மூலம் பௌத்த மத அடையாளங்களை திணிப்பதும் அதன் மூலமாக சிங்கள ஆக்கிரமிப்புகளை உருவாக்குவதும் என கடந்த காலம் தொடக்கம் இன்றுவரை தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கு எதிராக கையாண்டு வரும் மோசமான தந்திரோபயமாக இது இருக்கின்றது.

அந்த வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பௌத்த மகா சங்கத்தின் வழிகாட்டலில் இராணுவ அதிகாரிகள் தலைமையிலான ஜனாதிபதி செயலணி ஒன்றை உருவாக்கி பௌத்த மதத்திற்கு சொந்தமான தொல்லியல் பகுதிகள் என பூர்வீக தமிழ் கிராமங்களில் இருந்து தமிழ் குடும்பங்களை வெளியேற்றி கிழக்கு மாகாணத்தை பௌத்த மயமாக்கி, சிங்கள குடியேற்றங்களை பாரியளவில் செய்ய முயற்சிக்கும் இந்த நடவடிக்கை உடன் நிறுத்தப்பட வேண்டும்.

இதனை நிறுத்துவதனூடாகத்தான் எமது நாட்டில் உள்ள மூவின மக்களுக்குமான சமமான அந்தஸ்துக்களும், சுய நிர்ணய உரிமைகளும், அவர்களது தனித்துவமான அடையாளங்களும் பாதுகாக்கப்படும். அப்பொழுதுதான் நாட்டில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5)



நெல்லியடி வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் அழகர் பல்பொருள் வாணிப நிலைய உரிமையாளர் அமரர் மாரிமுத்துவின் நினைவாக அவருடைய மகன் சரவணன் கரவெட்டி பிரதேச வைத்தியசாலைக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான கணனித் தொகுதி ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார். இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவர் சதீஷ் மற்றும் நெல்லியடி வர்த்தக சங்க செயலாலர் சுரேரஞ்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

படம்-கரணவாய் செய்தியாளர்



நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் நோய் நிலைமையைக் கருத்திற் கொண்டு சாவகச்சேரி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் பங்களிப்புடன் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இரத்ததான முகாமில் 57 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் இரத்ததானம் செய்தனர். இரத்ததானம் வழங்கிய அனைவருக்கும் சாவகச்சேரி பசுமை நிழல்கள் அமைப்பால் பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

படம்-குப்பிழான் செய்தியாளர்

# தமிழ்மக்கள் பட்ட சொல்லொணா வலியை ஒருநாள் சிங்கள மக்கள் உணருவர்

## ஜனாதிபதியின் கூற்றுக்கு சுரேந்திரன் பதிலடி



(கொழும்பு)

**உயர் நீதிமன்றம் பாராளுமன்றத்தை மீளக் கூட்டுமாறு உத்தரவிட்டாலும் நான் ஒருபோதும் அதற்கு உடன்பட மாட்டேன் என ஜனாதிபதி கோட்டாபய சூளுரைத்திருப்பது, நாட்டின் நீதித்துறையை உதாசீனப்படுத்துவதோடு, தான் காக்க வேண்டிய அரசியல் சாசனத்தையும் தூக்கி வீசிய செயற்பாடாகும் என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தேசிய அமைப்பாளர் கு.சுரேந்திரன் தெரிவித்துள்ளார். ஊடகத்திற்கு அனுப்பிய அறிக்கையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அந்த அறிக்கையில், தம்மை பாதுகாக்கும் என சிங்கள மக்கள் முழு நம்பிக்கை வைத்திருக்கும் அரசியல் சாசனத்தை நிராகரித்து, தனது நிறைவேற்று அதிகாரத்தை பாவித்து நாட்டின் ஜனநாயக்தை கேள்விக்குட்படுத்தி, அவரை ஆர்ப்பரிப்போடு தெரிவு செய்த பெரும்பான்மை மக்களின் முகத்திலும் கரியை பூசி, ஒட்டுமொத்த மக்களின் ஜனநாயக உரிமை களுக்கும் ஆப்பு வைக்கும் வேலை திட்டத்தின் ஆரம்பமே இதுவாகும். தமிழின எதிர்ப்பு நடவடிக்கைகளால் இதை மூடிமறைக்க முற்படுவதை சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை போன்ற சிறிய நாடுகளின் ஜனநாயக பண்புகளையும் பொறுப்புக் கூறலையும் பொறுத்தே அந்த நாட்டிற்கான உதவிகளை வழங்குவதற்கும் முதலீடுகளை செய்வதற்கும் வளர்ந்த நாடுகள் முன்வரும் என்பது நியதி. உலக நாடுகளின் பொருளாதாரத்தை கட்டமைத்தல், மனித உரிமைகளை பாதுகாத்தல், சுகாதார வசதிகளை மேம்படுத்தல் , மனித குலத்திற்கு எதிரான வன்முறைகளை தடுத்தல், சரியான வளப் பகிர்வை உறுதிசெய்தல் உள்ளிட்ட பல நோக்கங்களின்பால் பல நாடுகளை உள்ளடக்கி பல சர்வதேச அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன.

அவ்வமைப்புக்களின் செயற்பாடுகளின் ப்லனாக பல சிறிய நாடுகள் தம்மை பலப்படுத்தி வருகின்றன. இதை உணர்ந்து செயற்பட வேண்டிய பொறுப்பு பிற நாடுகளை நம்பி வாழும் இலங்கைக்கும் பொருந்தும். இதை உதாசீனம் செய்யும் வகையில் இலங்கையின் ஜனாதிபதி பேசியிருப்பது ஒருசில இனவாதிகளை திருப்திப்படுத்தி இந்த நாட்டை இருண்ட யுகத்திற்கு இட்டுச்செல்லும் செயற்பாடாகவே அமையும்.

கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்ற போர் வெற்றிக் கொண்டாட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எந்த நாடுகளோ சர்வதேச அமைப்புக்களோ இலங்கையின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க விடமாட்டேன் எனவும் அதையும் மீறி அழுத்தங்களை பிரயோகத்தால் அந்த அமைப்புக்களின் உறுப்புரிமையிலிருந்து விலகிவிடுவோம் எனவும் இறுமாப்போடு கருத்துக்களை முன்வைத்திருந்தார். இந்த பேச்சை சாதாரணமாக கடந்து போக முடியாது. இந்த உலகில் அமைதியையும் ஜனநாயகத்தையும் விரும்பும் அல்லது மதிக்கும் எவரும் இதை ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள்.

ஜனாதிபதியின் தூரநோக்கற்ற இந்த நிலைப்பாட்டை வெறுமனே தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாடாக நினைத்து மகிழ்ச்சியுறும் பெரும்பான்மையின மக்கள் காலப்போக்கில் சிங்கள மக்களை இது எந்தளவிற்கு பாதிக்குமென விளங்கிக்கொள்வர்.

மாற்றுக்கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத பொறுப் புக்கூறலை நிராகரிக்கின்ற ஜனா திபதியின் போக்கு தமிழர்கள் உள் ளிட்ட சிறுபான்மையினரை மட்டு மன்றி ஜனாதிபதியினதும் அவரது கட்சிக்கு எதிரானதுமான அரசியல் நிலைப்பாட்டை கொண்ட சிங்கள மக்களுக்கும் இது பாதிப்பை ஏற்படுத்துவதுடன் தெற்கில் தனிக்கட்சி அரசியல் அல்லது துதிபாடும் அரசியல் சம்பிரதாயத்தையே ஊக்கப்படுத்தும்.

ஒரு நாடு தனது நாட்டில் உரிமை கேட்டு போராடிய சிறுபான்மை இனத்தை அழித்துவிட்டு அந்த மக்கள் தமது உறவுகளை நினைவு கூரும் சம காலத்தில் அந்த மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசு அதை வெற்றிக் கொண்டாட்டமாக கொண்டாடுவதே தவறான முன்னுதாரணமாகும்.

அந்த நிகழ்வில் நாட்டின் ஜனாதிபதி தனது பொறுப்பை உணராமல் பேசியிருப்பது மொத்த நாட்டினையும் பாதிக்கும் என்பதனை இந்த நாட்டுமக்கள் உணரும் காலம் வெகுதொலைவில் இல்லை என அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# அரிசிக்கான நிர்ணய விலை செல்லுபடியாகும்

(கொழும்பு)

அரிசிக்கு நிர்ணயிக்கப்பட்ட சில்லறை விலை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் தொடர்ந்தும் செல்லுபடியாகும் என பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்தது.

இது தொடர்பில் குறித்த நிறுவனம் மேலும் தெரிவிக்கையில்,

நிர்ணய வில்லையை விடவும் அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அவ்வாறான வர்த்தகர்களை கண்டறியும் வகையில் நாடு முழுவதும் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை மேலும் தெரிவித்தது.(ஜ-8)

# காஸாவில் பதிவான முதலாவது உயிரிழப்பு



(பாலஸ்தீனம்)

காஸாவில் முதலாவது கொரோனா வைரஸ் தொற்று உயிரிழப்பு பதிவாகியுள்ளது.

பாலஸ்தீனத்தில் காஸா நகரில் 77 வயதுடைய பெண் வயோதிபர் ஒருவரே கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

காஸாவில்,2 இலட்சம் சனத்தொகையில், 55 கொரோனா தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அண்மைய நாட்களில் காஸாவில், கடலோரப் பகுதிகளின் கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளது.

உறுதிப்படுத்தப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையை 20 க்கு மேல் அதிகரிக்காமல் கட்டுப்படுத்த முடிந்தது. மேலும் நோய் பரவாமல் தடுக்க, இஸ்ரேல் மற்றும் எகிப்து எல்லைகள் மூடப்பட்டன.

காஸாவில் பாடசாலைகளும் திருமண அரங்குகளும் மூடப்பட்டுள்ளன. புனித ரமழான் மாதத்தைக் குறிக்கும் முக்கிய விடுமுறை தினமான ஈதுல் பித்ரின் போது பொழுதுபோக்கு பூங்காக்கள் திறக்க அனுமதிக்கப்படவில்லை என்று ஹமாஸின் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (2-5)



# கவாசாகி நோய் குறித்து அச்சம் தேவையில்லை

## பாதெனிய தெரிவிப்பு

(கொழும்பு)

குழந்தைகள் மத்தியில் பரவுவதாக தெரிவிக்கப்படும் கவாசாகி நோய் தொற்று குறித்து தேவையற்ற அச்சம் வேண்டாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்துள்ள சூழலில், குழந்தைகள் மத்தியில் பரவுவதாகத் தெரிவிக்கப்படும் கவாசாகி நோய்த் தொற்று குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் கவாசாகி நோய்த் தொற்றுக் குறித்து எந்தவித அச்சமும் கொள்ளத்தேவையில்லை என குழந்தைகள் நோய் தொடர்பான விசேட வைத்தியர் அனுருத்த பாதெனிய தெரிவித்தார். (ஜ-4)

# திருமண நிகழ்விற்கு 100 பேருக்கே அனுமதி

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் திருமண நிகழ்வுகள் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்தால் அந்த நிகழ்வில் 100 விருந்தினர்களை மாத்திரமே அழைக்க வேண்டும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

திருமணநிகழ்வுபோன்று ஏனைய அனைத்து நிகழ்வுகளும் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கமையவே மேற்கொள்ள வேண்டும் எனச் சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் லக்ஷ்மன் கம்லத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் திருமண நிகழ்வு நடத்தும்போது திருமண நிகழ்வில் கலந்து கொள்பவர்கள் குறித்து தீர்மானிப்பதே முக்கிய விடயமாகும்.

அதாவது குறைந்தபட்சம் நூறு பேர் மாத்திரமே கலந்து கொள்ள வேண்டும். அவ்வாறு கலந்து கொள்ளும் அனைவரும் முகக் கவசம் அணிதல் உட்பட சுகாதார நடைமுறைகள் அனைத்தையும் பின்பற்ற வேண்டும்.

அத்துடன் திருமண நிகழ்வு இடம்பெறும் பிரதேசத்தில் சுகாதார வைத்திய அதிகாரியிடம் அனுமதியைப் பெறுவது கட்டாயமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா: 10¾ செவ் 10 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில் பட்டதாரி கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10777 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: HNDA, தொழில்நுட்ப உத்தியோகத்தர் எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/7847 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 15/16 சூரிசெவ் 11இல்<br>உயரம்:177cm<br>தகைமை/தொழில்:B.Sc, B.Eng. (civil). Engineer (civil)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/10781 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: 54 செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: B.A. Economics Accountant எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7852 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: 24 செவ் 9 இல்<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்: B.Sc, Engineer<br>எதிர்பார்ப்பு:படித்த பெண்<br>தொ.இ: B/10782 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 11 சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: வெளிவாரி பட்டதாரி, முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/7859 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 4<br>கி.பா: 23¾ செவ் 7 இல்<br>உயரம்: 5'3"தகைமை/தொழில்: Advanced Diploma in Bussiness Management (Singapore). IT<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10784 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: 24 செவ் 12 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. அரச வங்கி பதவி நிலை ஊழியர்<br>எதிர்பார்ப்பு: B.Sc பட்டதாரி, வைததியர், பொறியியலாளர், விரிவுரையா ளர், வங்கியாளர் போன்ற உத்தியோ கத்தர்.<br>தொ.இ: G/7865 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# இந்தியாவை மிரட்டும் கொரோனா! ஒரேநாளில் 154 பேர் உயிரிழப்பு!

(டில்லி)

இந்தியாவில்கொரோனா வைரஸால் ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 917 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 21 ஆக உயர்ந்துள்ளது.

இந்தியாவில்கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த ஊரடங்கு அமுலில் உள்ளது. வைரஸ் அறிகுறி உள்ளவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை அளித்தல் உள்ளிட்ட பல்வேறு நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெறுகின்றன.

எனினும் நாடு முழுவதும் வைரஸ் உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்புகள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

இந்நிலையில் நேற்றுக் காலை மத்திய சுகாதாரத்துறை வெளியிட்ட தகவலின்படி, இந்தியாவில் மொத்தம் ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 917 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மட்டும் 6 ஆயிரத்து 977 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 154 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம்கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 4 ஆயிரத்து 21 ஆக உயர்ந்துள்ளது.

இதுவரை 57 ஆயிரத்து 721 பேர் கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்துள்ளனர். (ஜ-4)

# கூட்டைக் கொத்தியது கழுகு நின்றவர்களைக் கொட்டியது குளவி

## பெண்ணொருவர் பலி

(ஹற்றன்)

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா தோட்டத்தில் குளவி கொட்டுக்கு இலக்காகிய பெண் தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஏழு பேர் காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஹற்றன் எபோட்சிலி தோட்டத்தைச் சேர்ந்த 48 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயான அம்பிகாமலர் என்பவரே உயிரிழந்தார்.

டிக்கோயா தோட்ட தேயிலை மலையில் கொழுந்து பறித்துக்கொண்டிருக்கையில் நேற்றுக் காலை 10 மணியளவில் மரமொன்றிலிருந்த குளவிக் கூட்டை கழுகு கொத்தியதால் குளவிக் கூடு கலைந்து கொழுந்து பறித்துக் கொண்டிருந்தவர்கள் மீது கொட்டியது.

இதனால் ஆறு பெண்களும் இரண்டு ஆண்களுமாக எட்டுப்பேர் காயமுற்றனர்.

இவர்களில் ஒரு பெண் உயிரிழந்துள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)





# 35 வருடகால சிரேஷ்ட ஆசிரியராக சேவையாற்றி ஓய்வுபெற்ற மணிவிழா நாயகனை வாழ்த்துகிறோம்

ஆசிரியர் பணியை திறம்பட ஆற்றி ஓய்வு பெறும் ஆசிரியர்

திரு.விசுவலிங்கம் உதயகுமாரன்

(பயிற்றப்பட்ட விவசாயம், கலைப்பட்டதாரி, கல்வி டிப்ளோமா)
மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா, முதுகலைமாணி.
(Sp. Trd. Agri-B.A.Dip.in edu, HRM Dip, MED)

அவர்களின் மணிவிழா நாளில் அவர்களுக்கு பிறந்தநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஓய்வுக் காலம் சிறப்பாகவும் நலமாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்

| | |
|---|---|
| களு/பொல்பிந்தன கந்த தமிழ் வித்தியாலயம் | 07.06.1985-11.07.1985 |
| களு/அல்ஹி மைஸரா மத்திய கல்லூரி | 12.07.1985-31.12.1989 |
| களு/மலபொட தமிழ் வித்தியாலயம் | 01.01.1990-31.12.1990 |
| யா/நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட ம.வி. | 01.01.1991-31.12.2005 |
| யா/ஒஸ்மானியாக் கல்லூரி | 01.01.2006-01.03.2006 |
| யா/கொட்டடி நமசிவாய மகா வித்தியாலயம் | 02.03.2006-12.10.2008 |
| யா/கொழும்புத்துறை இந்து ம.வி. | 13.10.2008-09.02.2015 |
| யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி. | 10.02.2015-24.05.2020 |

(C-9617)

"வாழ்க வாழ்கவென வாழ்த்துவோர்" ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.

# வீட்டுத்தோட்டங்களில் மிளகு நடுகை செய்து பயனடைவோம்

இலங்கை மக்கள் அனைவராலும் வாசனைத் திரவியமாகவும், மருத்துவப்பொருளாகவும் பயன்படுத் தப்பட்டு வரும் மிளகுப்பயிரானது இற்றைக்கு 3000 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. இப்பயிரின் தோற்று வாயாக இந்தியா விளங்குகின்றது. கிழக்கு ஆசியா, வடக்கு அமெரிக்க நாடுகளில் ஏற்றுமதிப்பயிராகவும் இலங் கையில் சிறு ஏற்றுமதிப்பயிராகவும் காணப்படுகிறது. இலங்கையில் மிளகுப் பயிரானது மாத்தளை, கண்டி, கேகாலை, பதுளை, இரத்தினபுரி, மொனராகலை, குரு நாகல் ஆகிய மாவட்டங்களில் **42,989ha** நிலப்பரப்பில் செய்கை பண்ணப்படுகின்றது. அதேவேளை யாழ். குடாநாட்டில் வீட்டுத்தேவைகளுக்காக சில வீட்டுத் தோட் டங்களில் இப்பயிர் கலப்புப்பயிராக நாட்டப்பட்டுள்ள போதி லும் பெரும்பாலான வீட்டுத்தோட்டங்களில் இப் பயிர் நடப்ப டுவதில்லை. இதற்கு மிளகு நாற்றுக்களை பெற்றுக்கொள் வதில் உள்ள சிரமம், பராமரிப்பு சம்பந்தமான தொழில்நு ட்ப அறிவின்மை போன்றன காரணங்களாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் பொருளாதார ரீதியாக விலையுயர்ந்த பொருளாக மிளகு காணப்படு கிறது. ஒவ்வொரு வீட்டிலும் மாதமொன்றிற்கு சராசரி யாக **100g** எனும் அடிப்படையில் வருடத்திற்கு **1200 - 1500g** மிளகு நுகரப்படுகின்றது. இதைக் கருத்திற் கொண்டு மிளகுத்தேவையை பூர்த்தி செய்யும் நோக்க மாக மிளகினை வீட்டுத்தோட்டங்களில் நடுகை செய்து பயனைப்பெறுவதற்குரிய சிறந்த வழிமுறைகளை தரும் நோக்குடன் இச்செய்தி அமைகிறது.

பெப்பரேசியே **(Piperaceae)** குடும்பத்தைச் சேர்ந்த பல்லாண்டு ஏறித்தாவரமான **(Climbers)** மிளகு பெப்பர் நைகிறம் **(Piper nigrum)** என்ற தாவரவியல் பெயரி னால் அழைக்கப்படுகின்றது. இது நிழலை விரும்பும் பயிராக இருப்பதால் கலப்புப் பயிராக நடுகை செய்யலாம். இதற்குரிய பொருத்தமான காலநிலையாக வெப்ப நிலை **$24^{\circ}C$**ஆகவும், வளிமண்டல ஈரப்பதன் **80%** ஆகவும் இருத்தல் அவசியமாகும். எனினும் நல்ல நிழலினை வழங்கக்கூடிய பலா, மா போன்ற மரங்களில் மிளகுப் பயிரினை படரவிடும் போது இப்பயிருக்கு தேவைப்படும் சிறப்பு வெப்பநிலையையும் ஈரப்பதனையும் வழங்கக் கூடியதாகவிருக்கும்.



இலங்கையில் பனியூர்1, குச்சின், **MB12, GK49**, உள்ளூர் இனங்களும் செய்கை பண்ணப்படுகின்றன. இருந்தபோதும் உள்ளூர் இனங்களே எமது காலநிலைக்கு மிகவும் பொருத்தமானதாக காணப்படுகின்றது. ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் இன்கிரிரால, கும்புரரால, பூட்டாவரால எனும் மூன்று புதிய இனங்களை அண்மை யில் அறிமுகம் செய்துள்ளன. இப் பயிருக்கான நடுகைப் பொருள் வெட்டுத்துண்டங்கள் ஆகும்.

### நடுகைப்பொருளான வெட்டுத்துண்டம் பெறலுக்கான தாய்த்தாவர தெரிவு

வெட்டுத்துண்டங்களை பெறுவதற்கு தெரிவு செய்யும் தாவரம் கீழ்வரும் இயல்புகளை கொண்டிருக்க வேண்டும்.

❖ ஆரோக்கியமான, வீரியமுள்ள, சிறந்த பற்றிப் பிடிக்கும் ஆற்றல் உள்ளவை

❖ தாராளமான பக்கக்கிளைகளை உருவாக்குவது டன் கணு இடைவெளி சிறிதாகவும் இருத்தல்.

❖ 5-7 கணுக்கள் 25செ.மீ. நீளமுள்ள கிளையில் காணப்படல் வேண்டும்.

❖ எல்லா அல்லது பெரும்பாலான கணுக்களில் பழக்குலைகள் தோன்றுதல்

❖ 15செ.மீ இலும் கூடிய நீண்ட பழக்குலைகளாக இருத்தல்

❖ உருண்டையான பழங்களாக இருத்தல்

❖ நோய் பீடைதாக்கமற்றதாக இருத்தல்

❖ வருடத்திற்கு வருடம் சீரான உயர் விளைச்சலை கொண்டிருக்க வேண்டும்.

❖ ஒழுங்கற்ற முறையில் காய்க்கும் கொடிகளை தெரிவு செய்யக்கூடாது.

தண்டின் நுனிப்பகுதி, பக்கக் கிளைகளிலிருந்து பெறப் படும் துண்டங்கள் மற்றும் தண்டின் அடிப்பக்கத்திலுள்ள ஓடிகள் நடுகைப்பொருளாக பயன்படுத்தப்படுகின்றது.

இருப்பினும் தண்டின் நுனிப்பகுதியும் தண்டின் அடிப் பக்கத்திலுள்ள ஓடிகளுமே நடுகைக்கு பொருத்தமானது.

### வெட்டுத்துண்டங்களைப் பெறும்போது கருத்திற்கொள்ளவேண்டியவை

❖ பழங்கள் அறுவடை செய்யப்பட்ட பின்பு தாய்த் தாவரத்திலிருந்து வெட்டுத்துண்டங்களை பெறவேண்டும்.

❖ ஒவ்வொரு துண்டமும் 2-3 கணுக்கள் கொண்டதா கவும் ஒரு இலை உடையதாகவும் இருத்தல் வேண்டும்.

### நடுகை செய்தல்

❖ நிழலான இடத்தை தெரிவு செய்தல்

❖ நடுகை இடைவெளி -**2.5x2.5m** அல்லது $7^{1/2'} X 7^{1/2'}$

❖ நடுகைக்குழி $1^{1/2'} X 1^{1/2'} X 1^{1/2'}$ அளவில் அமைக் கப்பட வேண்டும்.

❖ கூட்டெரு, மேல்மண் என்பவற்றை 1:1 என்ற விகிதத் தில் கலந்து தயாரிக்கப்பட்ட ஊடகத்தினால் நடுகைக் குழியை நிரப்பி நாற்றினை நடுகை செய்தல்

❖ நடுகை செய்தவுடன் நிழல் வழங்கப்படல் முக்கியமானது.

❖ மண் ஈரப்பதனை பேணுவதற்காக தென்னம்பொச்சு, உமி, காய்ந்தபுற்கள் போன்றவற்றை நடப்பட்ட மிளகுத் தாவ ரத்தின் அடிப்பகுதியை சுற்றி பத்திரக்கலவையாக இடல்.

❖ நாட்டப்பட்ட தாவரத்திற்கு சீமைக்கிழுவை, அகத்தி, முள்முருக்கை போன்றவற்றால் ஆதாரம் வழங்கல்.

❖ வீட்டுத்தோட்டங்களில் கமுகு, பலா, மா போன்ற மரங்களில் மிளகுப் பயிரினை ஏறிகளாக வளரவிடலாம்

### பசளைப்பிரயோகம்

சேதனப்பசளை இடுவதாயின் இரசாயன உரம் இடுவ தன் அளவை அரைவாசியாக குறைத்துக்கொள்ள முடியும்.

| சேதன பசளை வகை | அளவு (கிலோகிராம் / வருடம் / கொடி) |
|---|---|
| சீமைக்கிழுவை இலை | 10 -15 |
| உலர்ந்த மாட்டு சாணம் | 16 |
| உலர்ந்த கோழி உரம் | 12 |
| மண்புழு உரம் | 15 |

### வருடாந்த பசளை/கொடி

| காலம் | யூரியா (கிராம்) | ரி.எஸ்.பி (கிராம்) | எம்.ஓ.பி (கிராம்) |
|---|---|---|---|
| 1ம் வருடம் | 66 | 50 | 66 |
| 2ம் வருடம் | 133 | 100 | 133 |
| 3ம் வருடம் மற்றும் அதன் பின்னர் | 200 | 150 | 200 |

### கத்தரித்தல்

❖ மிளகுக்கொடியில் நேர்த்திருப்பக்கிளை, பக்கத்திருப் பக்கிளை என இரண்டு வகை கிளைகள் தோன்றும்.

❖ நேர்த்திருப்பக்கிளையில் 3-4 கிளைகளை மட்டும் அனுமதித்து ஏனைய கிளைகளை அகற்றல் வேண்டும்.

❖ பக்கத்திருப்பகிளைகளை கத்தரித்தல் வேண்டும்.

❖ அவற்றுடன் நீர்வாதுக்கள், நோய்பீடைக்குட்பட்ட வாதுக்கள், உற்பத்தி குறைவான வாதுக்கள் என்பவற்றை கத்தரித்து காற்றோட்டம் உள்ளவாறு பேணுதல் வேண்டும்.

### மகரந்தச் சேர்க்கை

❖ மிளகுக்கொடியில் முனை அரும்புகளில் மஞ்சள் கல ந்த வெள்ளை நிறமான பூக்கள் தோன்றும்

❖ மகரந்தச் சேர்க்கை நீரின் மூலமே நடைபெறுகின்றது.

❖ இதனால் இக்காலங்களில் மழைவீழ்ச்சி முக்கிய மானதொன்றாகும்.

❖ இவற்றிற்கு மாறான காலங்களில் நீரை விசிறுவதன் மூலம் மகரந்தச்சேர்க்கையைத் தூண்டமுடியும்

❖ வருடத்தில் இரு போகங்களிலும் பூக்கள் தோன்றும்

❖ 6-7 மாதங்களில் முதிர்ந்த காய்களை பெறமுடியும்

### அறுவடை

முறையாக பராமரிப்பின் கீழ் வளர்ந்த கொடிகளிலிருந்து



முதிர்ந்த காய்களின் தோற்றம்

$2^{1/2}$ வருடமளவில் அறுவடையை மேற்கொள்ள முடியும்

➢ பழக்காம்பொன்றில் 100-120 முதிர்ந்த பழங்கள் காணப்படும்


➢ இப்பழங்களுக்கிடையில் பச்சை, மஞ்சள், சிவப்பு நிற வித்தியாசங்களை அவதானிக்கமுடியும்

➢ பழக்காம்பின் நுனிப்பகுதியில் காணப்படும் பழ மானது விரல்களால் நசிக்கமுடியாதளவிற்கு கடினமாக காணப்படும்

➢ பழக்காம்பினை கூரியகத்தியினால் வெட்டி 24-48 மணித்தியாலங்கள் குவித்து வைத்தல் வேண்டும்

➢ இதன்போது பச்சை நிறமான விரல்களால் நசிக்க முடியாத பழங்களும் கறுப்பு நிறமாக மாறும்.

➢ பின்னர் இவற்றை 5-6 நாட்கள் நன்கு காய விடு வதன் மூலம் கறுப்பு நிறமான மிளகினைப் பெற்றுக் கொள்ள முடியும்.




பழக்காம்பு ஒன்றின் தோற்றம்

### விளைச்சல்

சாதாரணமாக மிளகுக்கொடி ஒன்றிலிருந்து ஒரு போகத்தின் போது **750-1000g** கறுப்பு மிளகினைப் பெறமுடியும்.

வீட்டுத்தோட்ட மிளகுக்கொடி ஒன்றிலிருந்து விளைவாக பெற்றுக்கொள்ளப்பட்ட மிளகு



மேற்கூறியவாறு மிளகுப்பயிரை வீட்டுத்தோட்டங் களில் நடுகை செய்து பராமரிப்பதன் மூலம் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் மேலதிக வருமான த்தையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

வட மாகாணத்தில் அதிகளவான விஸ்தீரணத்தில் மிள்குப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதில்லை யாகையால் விவசாயத் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தனியார் நாற்றுமேடையாளர்களில் குறிப் பிட்ட சிலர் மிளகு அதிகம் பயிரப்படும் மாவட்டங்களில் இருந்து மிளகுக் கன்றுகளைப் பெற்று விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்நாற்று மேடையாளர்களின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

எனவே வீட்டுத்தோட்டங்களில் மிளகுக் கொடியினை நடுகை செய்ய விரும்புவர்கள் குறித்த நாற்று மேடை யாளர்களுடன் தொடர்பு கொண்டு மிளகுக்கன்று களை கொள்வனவு செய்து நடுகை செய்து பயனடை யுங்கள்.

| இல | நாற்றுமேடை விபரம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| 01 | நியூலங்கா பூங்கனிச்சோலை | பலாலி வீதி உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். | 077 - 6129343 |
| 02 | பவிசாறு பூங்கனிச்சோலை | 311 பலாலி வீதி கோண்டாவில், யாழ்ப்பாணம். | 021 - 2228199<br>077 - 3976203 |
| 03 | ஜெனிஸ்ரன் பூங்கா | நொச்சிமோட்டை, வவுனியா. | 024 – 2221909<br>077 - 4388395 |

திருமதி.செ.செந்தூர்க்குமரன்
விவசாயப் போதனாசிரியர்,
மாகாண விவசாயத்திணைக்களம்,
(வடமாகாணம்).

# நாட்டு மக்களின் வயிற்றில் அடித்து நெடுஞ்சாலைகள் அமைப்பது நியாயமா?

## தலதா அத்துகோரள சீற்றம்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத் திட்டங்கள் தொடர்பான தீர்மானங்களை நிதி அமைச்சு எடுக்கின்றதா? அல்லது ஜனாதிபதி செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவினால் எடுக்கப்படுகின்றதா? என்பது தொடர்பில் சந்தேகம் எழுந்திருப்பதாக தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள இந்த விவகாரம் தொடர்பில் நிதி அமைச்சின் செயலாளர் பொறுப்புக் கூற வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெற்றிபெற்றதிலிருந்து இன்றுவரை எதேச்சதிகாரமிக்க ஜனாதிபதியாகவே செயற்பட்டு வருகிறார். எதற்கென்றாலும் இராணுவத்தையே முன்னிறுத்தி செயற்படுகிறார்.

அவரது செயற்பாடுகளினால் அவருக்கு ஆதரவாக வாக்களித்த மக்கள் மாத்திரமின்றி அனைவரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடிக்கு மத்தியில் கடந்த மார்ச் மாதம் 11 ஆம் திகதி தேசத்திற்கு உரையாற்றிய ஜனா திபதி ரின்மீனுக்கும் பருப்புக்கும் சலுகை வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

தற்போது வரி அதிகரிப்பினால் அந்தப் பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளது.

அரசாங்கம் மக்களுக்கு சலுகைகளை பெற்றுக் கொடுக்க தன்னிடம் நிதி இல்லை என்று தெரிவித்துக்கொண்டு நெஞ்சாலைகளை அமைப்பதற்காகவும் பெருந்தெருக்கள் புனரமைப்புக்கும் மற்றும் விளையாட்டு அரங்கு அமைப்பதற்காகவும் சீனா உள்ளிட்ட நாடுகளிலிருந்து கடன்பெறுவது எவ்வாறு என்று சிந்தித்து வருகின்றது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் இந்த வேலைத்திட்டங்கள் அவசியம் தானா? தற்போது அரச தரப்பு அமைச்சர்களே ஒருவரை ஒருவர் விமர்சித்துக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

எமது ஆட்சிக்காலத்தில் இவ்வாறு இடம்பெற்றிருந்தால் அதனையே பாடுபொருளாய் கொண்டிருப்பார்கள். ஆனால் நாங்கள் அவ்வாறு செயற்பட மாட்டோம்.



நாட்டின் நிதி ஒதுக்கீடுகளை நிதி அமைச்சரான பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இடம்பெறுகின்றதா? இல்லை ஜனாதிபதி செயலாளர் பி.பீ. ஜயசுந்தரவின் தலையீட்டில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றதா? என்பது தொடர்பில் தற்போது சந்தேகம் எழுந்துள்ளது.

பாராளுமன்றத் தேர்தலுக்காக திகதி அறிவிக்கப்படாத நிலையிலும் தொடர்ந்தும் நிதி ஒதுக்கீடு செய்வது அரசியலமைப்புக்கு புறம்பான செயற்பாடாகும்.

இந்நிலையில் இந்த விவகாரங்கள் தொடர்பில் நிதி அமைச்சின் செயலாளரே பொறுப்புக் கூறவேண்டிய நிலைமை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# ஊரடங்கை மீறிய ஆயிரத்து 710 பேர் கைது

(கொழும்பு)

ஊரடங்கை மீறிய குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் ஆயிரத்து 710 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் அவர்கள் பயணித்த 557 வாகனங்களும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி ஊடரங்கு அமுல்படுத்தப்பட்டதில் இருந்து இதுவரை ஊரடங்கை மீறி நடமாடிய 64 ஆயிரத்து 387 பேர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# 20 ஆயிரத்து 497 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

ஊரடங்கை மீறி நடமாடிய குற்றச்சாட்டில் கைதானவர்களில் 20 ஆயிரத்து 497 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது. இந்நிலையில் வழக்கு தொடரப்பட்டவர்களில் இதுவரையில் 7 ஆயிரத்து 661 பேருக்கு தண்டனை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# ரஷ்யாவிலிருந்து 181 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பல நாடுகளிலும் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் ரஷ்யாவில் சிக்கித்தவித்த 181 பேர் விசேட விமானம் மூலம் நேற்றுக் காலை 5.50 மணியளவில் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் ஸ்ரீலங்கன் எயார் லயன்ஸிற்கு சொந்தமான யுஎல் -1206 சிறப்பு விசேட விமானம் மூலம் அழைத்து வரப்பட்டனர்.

இந்நிலையில் நாடு திரும்பிய அனைவரும் தொற்று நீக்கல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைக்ளை இராணுவத்தினர் முன்னெடுத்தனர். (ஜ-4)

# fb (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... 2044 facebook

வேணுகா





சுகஸ்திகா




ஹரிராம்




சுபாங்கி




ரவிநாத்




பாலாஜி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# முல்லையில் கடும் காற்று 48 வீடுகள் சேதம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கடந்த 23 ஆம் திகதி வீசிய கடும் காற்று காரணமாக 14 வீடுகள் சேதமடைந்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட ஆனந்தபுரத்தில் வீசிய கடும் காற்று காரணமாக சிறிய ஆலயம் உள்ளிட்ட 14 வீடுகள் சேதமடைந்துள்ளன.

சுமார் பத்து நிமிடங்கள் வீசிய கடும் காற்று காரணமாக 14 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் 18 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை வீசிய கடும்காற்று மற்றும் மழையினால் ஒட்டுசுட்டான் மற்றும் கருநாட்டுக்கேணிப் பகுதிகளில் 34 வீடுகளும் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட குடும்பங்களின் விபரங்கள் கிராம உத்தியோகத்தர் ஊடாக சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதற்கட்ட உதவிகளை வழங்கும் நடவடிக்கை முன்னெடுத்துள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்து நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (2-281)

# அனுமதியின்றி காட்டில் நுழைந்தவர்கள் விமானப்படையினரால் கைது



(தர்மபுரம்)

விமானப்படையினரின் கட்டுப்பாட்டு பகுதியில் அத்துமீறி மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு உழவு இயந்திரமும் அதன் சாரதிகள் இருவரும் மற்றும் அனுமதியின்றி காட்டுக்குள் உள் நுழைந்த மூவருமாக ஐந்து பேர் விமானப்படையினரால் கைது செய்து மேலதிக விசாரணைக்காக தருமபுரம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகள் முன்னெடுத்து வருகின்றனர். (2-5-316)

# வாழ்விடங்களை துவம்சம் செய்யும் காட்டு யானைகள் வாழ்வாதாரத்தைத் தொலைத்து ஏங்கும் மாணிக்கபுர மக்கள்

(பனிக்கன்குளம்)

விசுவமடு பிரதேசம் மாணிக்கபுரம் கிராமத்தில் நாள் தோறும் காட்டு யானைகளின் தொல்லையால் மக்கள் வாழ்விடத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

மாணிக்கபுரம் கிராமத்தின் காட்டுக்கரை பகுதி மக்களின் விவசாயப் பயிர்களை காட்டு யானைகள் நாள்தோறும் நாசம் செய்துவருவதால் மக்கள் வாழ்விடத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

மாணிக்கபுரம் பகுதியில் வீட்டுத்தோட்டத்தை செய்துவரும் மக்களே வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாக நாளாந்த வருமானம் இல்லாத நிலையில் தவித்து வருகின்றார்கள். இதனால் வீட்டுத்தோட்டமாக செய்கை பண்ணிய மரவள்ளி, வாழை போன்றவற்றை யானைகள் அழித்துள்ளதாக கவலை தெரிவித்துள்ளார்கள்.

தொடர்ச்சியாக ஆண்டு தோறும் யானையினால் அழிவைச் சந்தித்து வருவதாகவும் இதனால் வாழவிடத்தினை விட்டு வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

யானைவேலி அமைத்து தருவதாக கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சொல்லி வருகின்றார்கள். ஆனால் யானைவேலி அமைத்துக் கொடுக்கப்படவில்லை என்றும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர். (2-5-281)

# கசிப்பு தயாரிக்கவிருந்த வீடு முற்றுகை 35 ஆயிரம் மில்லிலீற்றர் கோடாவுடன் ஒருவர் கைது

(வவுனியா)

வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேற்பார்வையின் கீழ் செயற்படும் விசேட போதை ஒழிப்புப் பிரிவினரால் வவுனியா கோவில் புதுக்குளத்தில் சட்டவிரோத கசிப்பு தயாரிப்பதற்கு தயார் நிலையில் இருந்த வீடு முற்றுகையிடப்பட்டுள்ளதுடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படும் 35 ஆயிரம் மில்லி லீற்றர் கோடாவுடன் (ஸ்பிறிற்) சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.



இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வவுனியா பொலிஸ் பிரிவிலுள்ள கோவில்புதுக்குளம் பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு காய்ச்சுவதாக விஷேட போதை ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற் கொண்ட பின்னர் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப் போவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஜ-5-250-299)



கொடையாளர் எஸ்.கதிர்காமநாதனின் 52 மில்லியன் ரூபாய் நிதிப் பங்களிப்புடன் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் புதிதாக அமையப்பெறவுள்ள என்புமுறிவு சத்திர சிகிச்சை விடுதி மற்றும் கண் சத்திரசிகிச்சை விடுதி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பணிப்பாளர் வைத்தியர் க.ராகுலன் தலைமையில் நடைபெற்றது. (படம்: பரந்தன் செய்தியாளர்)

# அம்மாவைத் தேடி அந்தரித்த யானைக்குட்டி

(வவுனியா)

வவுனியாவில் அநாதரவாக அலைந்து திரிந்த யானைக் குட்டி ஒன்றை சிவில் பாதுகாப்பு படையினர் பிடித்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

வவுனியா பொகஸ்வெவ எனும் பகுதியிலேதாயின் துணையின்றி அநாதரவாக அலைந்த ஆண்யானைக் குட்டியே கடந்த சனிக்கிழமை இரவு பிடிக்கப்பட்டது.

குறித்த யானை தன் தாயினை தேடியபடி சிவில் பாதுகாப்புப் படைத்தளத் திற்கு அருகில் வந்துள்ளது.

இதனையடுத்து குறித்த யான்னக்குட்டியினை சிவில் பாதுகாப்பு படையினர் பிடித்து வவுனியா வனஜீவராசிகள் தினணக்களத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதனையடுத்து வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் யானைக் குட்டியை வனஜீவராசிகள் திணைக்கள மிருக வைத்திய அதிகாரியை அழைத்து பரிசோதனைகளை மேற்கொண்டதன் பின்னர் யானையை காட்டுப்பகுதியில் விடுவதற்கு நடவடிக்கை எடுத்தனர். (2-5- 299)



முல்லைத்தீவு - வற்றாப்பளை, கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் விழாவை முன்னிட்டு, ஊர் மக்களுக்கு அறிவிக்கும் பாரம்பரிய பாக்குத்தெண்டல் நிகழ்வானது நேற்று அதிகாலை இடம்பெற்றது.

# பேருந்து நிலையம் தொற்று நீக்கம்



(வவுனியா)


லண்டன் என்பீல்ட் நாக பூசணி அம்பாள் வெளிச்சம் அறக்கட்டளை ஆகியன வவுனியா மாவட்ட சமூக சேவை, திணைக்களத்துடன் இணைந்து வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் கிருமி தொற்று நீக்கும் பணியில் ஈடுபட்டன.

இத் தொற்று நீக்கும் பணி வடமாகாண போக்குவரத்து அதிகார சபைத் தலைவர் சு. அமிர்தலிங்கம், வவுனியா மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் எஸ். எஸ். ஸ்ரீநிவாசன், வவுனியா மாவட்ட சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் கனடி ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்றது. (2-5-299)

# சுதந்திரத்திற்குப் பின் இலங்கை பாராளுமன்றத் தேர்தல்கள்

01

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



நவீன ஆட்சி முறைகளில் ஜனநாயகம் மிகவும் பிரபல்யமானது. "மக்களால் மக்களுக்கான மக்களின் ஆட்சி" ஜனநாயகம் என்பது ஐக்கிய அமெரிக்காவின் 16 ஆம் ஜனாதிபதி ஆபிரகாம்லிங்கனின் வரைவிலக்கணமாகும். "அனைவருக்கும் உரிமைகள் கிடைக்கும் ஓர் ஆட்சி முறை" என்று சீலர் எனும் அரசியல் அறிஞர் ஜனநாயகத்தை அறிமுகப்படுத்துகிறார். புராதன கிரேக்கத்தில் எதென்ஸ், ஸ்பாட்டா முதலிய நகர அரசுகளில் நேரடி ஜனநாயகம் நிலவியது. அங்கு ஒன்று கூடிய பிரஜைகள் ஆட்சி நிர்வாகம் தொடர்பான முடிவுகளை எடுத்தனர். அதாவது நேரடி ஜனநாயகம் என்பது மக்கள் எல்லோரும் ஒன்று கூடி முடிவெடுப்பதாகும்.

வாக்குரிமை உள்ள பிரஜைகள் ஆட்சி நடவடிக்கைகளுக்காகத் தமது பிரதிநிதிகளைத் தேர்தல் மூலம் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்தல் பிரதிநிதித்துவ ஜனநாயகம் எனப்படும். தற்போது உலகின் பெரும்பாலான நாடுகளில் பிரதிநிதித்துவ ஜனநாயக ஆட்சியே மேற்கொள்ளப்படுகின்றது. சனத்தொகை அதிகரித்தமை, மனித தேவைகள் அதிகரித்தமை, முதலிய காரணங்களால் நேரடி ஜனநாயகத்தை செயற்படுத்துவதும் முடியாத காரியமாகும். அதற்குப் பதிலாக பிரதிநிதித்துவ ஜனநாயகம் இன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது

ஜனநாயகம் வெற்றியளிப்பதற்கான அடிப்படைக் காரணிகள் இரண்டு, ஒன்று சுதந்திரம் மற்றது சமத்துவம். அனைவரும் சமூகத்தில் கௌரவமாக வாழ்வதற்கான உரிமையைப் பெற்றிருத்தல் சுதந்திரமாகும். பிரஜைகள் அனைத்து அடிப்படை உரிமைகளையும் அனுபவிப்பதற்கு சமூகத்தில் சமத்துவம் நிலவ வேண்டும். ஜனநாயகத்தின் வெற்றிக்கான காரணிகள் சர்வஜன வாக்குரிமை. காலத்துக்குக் காலம் தேர்தல் நடைபெறுதல், அரசியல் அறிவு படைத்த மக்கள் அரசியல் கட்சிகள் காணப்படுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

### அரசியல் கட்சிமுறை

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் பிரதான ஆயுதம் அரசியல் கட்சிகளாகும். கட்சி முறையைத் தவிர்த்து ஜனநாயக அரசியலைப் பற்றி பேசமுடியாத அளவுக்கு இரண்டும் பின்னிப்பிணைந்துள்ளன. பிரித்தானியாவில் பாராளுமன்ற ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 17ஆம் நூற்றாண்டில் அரசியல் கட்சிகள் ஆரம்பமாகின. இன்று ஜனநாயகத்தின் அடிப்படையே அரசியல் கட்சிகளாகக் காணப்படுகின்றன. ஆட்சியுரிமையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அரசியல் கட்சிகள் தமது கொள்கையை மக்கள் மத்தியில் முன்வைக்கின்றன. அரசியல், பொருளாதார, சமூக, கலாசார, வெளிவிவகார, சமூக நலன்புரி முதலிய துறைகளில் தாம் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் பற்றி கட்சி கொள்கைகள் விளக்கமளிக்கும். பொது மக்கள் கட்சிகளின் கொள்கைகளுக்கேற்ப தனது பெறுமதி மிக்க வாக்குகளை தேர்தலின் போது தமக்கு விருப்பமான கட்சிகளுக்கு வழங்குவர். தேர்தலின் போது அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின்படி அரசாங்கக் கட்சியும் எதிர்க்கட்சியும் தெரிவு செய்யப்படும்.

### இரு கட்சி முறை

ஒரு நாட்டில் இரண்டு கட்சிகள் மட்டும் காணப்படுமாயின் அது இரு கட்சி முறை எனப்படும். இம்முறையே சிறப்பான ஜனநாயக ஆட்சிக்கு வழிவகுக்கும். இம்முறையில் பலமான ஆளும் கட்சியும் பலமான எதிர்க்கட்சியும் அமையும். அரசியல் கட்சி முறை ஆரம்பமான பிரித்தானியாவில் ஆரம்பக் காலத்தில் இரு கட்சிகளே இருந்தன. எனினும் தற்போது பலகட்சிகள் உள்ளன. இன்றும் அங்கு தொழிற்கட்சி மற்றும் பழைமை பேண் கட்சி (கொன்சவேட்டிவ்) ஆகிய இரு கட்சிகளுள் ஒன்றே ஆட்சிக்கு வருகின்றன. எனவே இங்கிலாந்து இருகட்சி முறை கொண்ட நாடாக கருதப்படுகிறது. ஐக்கிய அமெரிக்காவிலும் முக்கிய கட்சிகள் இரண்டு மாறி, மாறி ஆட்சிக்கு வருகின்றன. எனவே அந்நாட்டிலும் இரு கட்சிமுறை நிலவுவதாகக் கருதப்படுகிறது.

### பல கட்சி முறை

ஒரு நாட்டில் இரண்டுக்கும் அதிகமான கட்சிகள் காணப்படுமாயின் அது பல கட்சி முறையாகும். ஜேர்மனி, இத்தாலி முதலிய ஐரோப்பிய நாடுகளிலும் இந்தியா, இலங்கை முதலிய ஆசிய நாடுகளிலும் பல கட்சி முறையே காணப்படுகின்றது. இலங்கையின் மக்கள், ஆட்சி நடைமுறையில் நிறுவனங்களுக்கான பிரதிநிதிகளை தேர்தலினூடாக தேர்ந்தெடுப்பதன் மூலம் நாட்டின் ஆட்சி நடவடிக்கைகளோடு இணைந்து கொண்டமை 1911 ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இன்று பிரதிநிதித்துவ ஆட்சி நடைமுறை ஜனாதிபதி, பாராளுமன்றம், மாகாணசபை மற்றும் உள்ளூர் அதிகாரசபை என்பன தேர்தல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இச் சபைகளுக்கு பிரதிநிதிகளை தெரிவுசெய்யும் முறை, நிருவாகக் கட்டமைப்பு, தேர்தல்களை நடத்தும் முறை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சபைகளை உருவாக்கல் என்பன 1978 ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பிலும் அதன் பின் வந்த திருத்தச் சட்டங்களிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் பங்களிப்போடு மேற்கொள்ளப்படுகின்ற, இறுதியாக பொதுமக்கள் வசம் அதிகாரம் சென்றடைகின்ற ஆட்சி முறையொன்றாக சனநாயக ஆட்சி முறை ஏற்றுக்கொள்ளப்படுவதனால், பொதுமக்கள் ஆட்சி அதிகாரத்தில் பங்கு எடுத்துக்கொள்வது எவ்வாறென்பது முக்கியமான ஒரு விடயமாகும்.

பொதுமக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஆட்சி அமைப்பும், அதற்கான பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் முறையும் ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டமான அந் நாட்டின் அரசியல் அமைப்பிலும் தேர்தல் நியதிச் சட்டங்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கும். ஒரு நாட்டின் தேர்தல் முறை அந்நாட்டின் வரலாற்று, சமூக மற்றும் அரசியல் நிலைமைகளோடு பிணைந்த பல்வேறு காரணிகளின் அழுத்தம் காரணமாக உருவானதும் மக்களின் தேவைகளுக்கேற்ப அடிக்கடி திருத்தங்களுக்குள்ளானதுமான ஒரு முறையென அழைக்க முடியும். காலனித்துவ நாடுகளாகக் காணப்பட்ட உலகின் பெரும்பாலான நாடுகள் சுதந்திரம் கிடைத்ததன் பின்னர், அமைத்துக்கொண்ட தமது நாடுகளுக்கான ஆட்சிமுறைமைகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறைமைகள், காலனித்துவ ஆட்சியாளர்களின் தாய்நாடுகளில் பின்பற்றப்பட்ட முறைகளைப் பெரிதும் ஒத்தமுறைகளில் அமைப்பதற்கான பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அத்தகைய நாடுகளின் வரலாற்றுத் தகவல்களைப் பரிசீலிக்கின்ற போது தெளிவாகின்ற ஒரு விடயமாகும். இவ்விதத்திலான அழுத்தமொன்று பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களினால் இலங்கையின் விடயத்திலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### "பிரதிநிதித்துவம்"

"பிரதிநிதித்துவம்" தொடர்பான கோட்பாடு நிகழ்காலத்தில் பல்வேறு விதங்களில் பொருள் கோடல் செய்யப்படுகின்றது. சட்டவாக்க சபையொன்றிற்கு ஏதேனுமொரு தேர்தல் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதி அத் தேர்தல் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக கூறப்படுவதால் இங்கு நிகழ்கின்ற பிரதிநிதித்துவமுறை "அபிலாசைப்பிரதிநிதித்துவம்" என அழைக்கப்படுகின்றது.

பிரதிநிதி தமது தொகுதிக்குள் உள்ள வாக்காளர்கள் சார்பாக சட்ட வாக்க சபைக்குள் பிரதிநிதித்துவத்தை மேற்கொண்டு வாக்காளரின் நலனுக்காக நடவடிக்கையெடுப்பாரென நம்பப்படுகின்றது. அவர்கள் நடவடிக்கையெடுக்க வேண்டியவிதம் குறித்த இரண்டு கருத்துக்கள் காணப் படுகின்றன. பிரதிநிதிதான் சட்டவாக்கச் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்ட தேர்தல் தொகுதியின் விருப்பத்திற்கமைய நடந்து கொள்ளல் வேண்டுமென்பது ஒரு கருத்தாகும். அது தொடர்பாகவுள்ள அடுத்த கருத்து யாதெனில் பிரதிநிதி தமது தொகுதிக்கு சிறந்தவையெனத்தான் கருதுகின்ற விதத்தில் நடந்து கொள்ளவேண்டும் என்ற கருத்தாகும்.

நிகழ்காலத்தில் அரசியல் கட்சிகள் என்ற அமைப்புக்களின் சில கொள்கைகளின் அடிப்படையில் நடவடிக்கையெடுப்பதற்கு, அங்கத்தினர்களாக அவற்றோடு இணைந்து நடவடிக்கையெடுப்பவர்கள் தேர்தல்களின் போது கட்சியினால் தேர்தலுக்கான வேட்பாளர்களாக முன் வைக்கப்படுகிறார்கள். இப் பணியின்போது அரசியல் கட்சிகள், இடைத்தரகர்களாக செயற்படுவதனால் அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்படுகின்ற வேட்பாளர்களில் ஒருவரை நிகழ்கால தேர்தல்களின் போது தமது வாக்கினை வழங்கி தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை வாக்காளருக்கு ஏற்பட்டுள்ளது.

தேர்தல் முறைமைகளுக்கமைய மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் பெருமளவிலான முறைமைகள் உலகெங்கும் செயற்படுவதைக் காணமுடிகின்றது. உலக நாடுகளில் காணப்படுகின்ற அத்தகைய ம்றைமைகளில் ஒன்றுக்கு ஒன்று முரணான விடயங்கள் பல காணப்பட்ட போதிலும் அவை அனைத்தும் முக்கியமாக பெரும்பான்மை முறைமை மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை என இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு விளக்கப்படுகின்றன.

### பெரும்பான்மை முறைமை (Majority System)

இம் முறைமைகளில் பெரும்பான்மை முறைமையின் **(Majority System)** கீழ் தேர்தல் தொகுதியின் அதிகூடுதலான வாக்குகளை பெற்றுக்கொள்கின்ற வேட்பாளர், பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார். **(First Past the Post System – FPP)** அவர் உரிய தேர்தலில் செல்லுபடியான வாக்குகளில் அறுதிப் பெரும்பான்மையொன்றை **(Absolute Majority)** பெற்றிருக்கின்றார் எனக்கருத்தில் கொள்ளப்படவும் மாட்டாது. "இது எளிய பெரும்பான்மை தேர்தல்முறை" எனவும் அழைக்கப்படுகின்றது.

அதாவது எளிய பெரும்பான்மை தேர்தல்முறை என்பது ஒரு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களில் யார் அதிக வாக்குகளைப் பெறுகிறாரோ அவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும் போது அவரை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளர்கள் யாவரும் சேர்ந்து பெற்ற வாக்குகளைச் சேர்த்துப் பார்த்தால், பலசமயம் அது வெற்றி பெற்றவர் பெற்ற வாக்குகளைவிடக் கூடுதலாக இருப்பதுண்டு.

எனவே அந்த தொகுதியில் சிறுபான்மை வாக்குகளைப் பெற்றவர் வெற்றி பெற்று அந் தத் தொகுதியின் பிரதிநிதியாகச் செல்லும் நிலை ஏற்படுகிறது. இந்த முறைமை "பெரும்பான்மைக்கு அதிகாரம்" என்ற ஜனநாயகத்தின் அடிப்படைக்கு எதிராக உள்ளது.

இத் தேர்தல்முறை இரு கட்சிகள் போட்டியிடும் தேர்தல் முறைக்கு மட்டுமே பொருத்தமானதாகும். ஆனால், ஒரு தொகுதியில் பல கட்சிகள் போட்டியிடும் தேர்தல் முறைக்கு விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை (Proportional Representative System) சிறப்பானதாகும்.

### விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை

விகிதாசார பிரதிநிதித்துவ முறையொன்றின் கீழ் (Proportional Representative System) ஒரு கட்சி அல்லது குழுசார்பாக வாக்காளரினால் தமது வாக்குகள் பயன்படுத்தப்படும். இதற்கு மேலதிகமாக வாக்களிக்கப்பட்ட அக் கட்சியின் அல்லது குழுவின் வேட்பாளர்கள் பலர் சார்பாக விருப்புகளை அடையாளமிடுவதற்கும் வாக்காளருக்கு இடமளிக்கப்படுகின்றது.

(தொடரும்...)

# சவால்களுக்கு மத்தியில் பெற்ற வெற்றியை நல்லாட்சி அரசு தலைகீழாக்கிவிட்டது

## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்கிறார் பிரதமர்



(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை எதிர்கொள்ள நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் தனித்து செயற்பட்டால் நாடு மீண்டும் இருண்ட யுகத்தை நோக்கிச் செல்லும் என்றும் நல்லாட்சி அரசாங்கத்தால் பலவீனப்படுத்தப்பட்டுள்ள சவால்களுக்கு மத்தியிலே தற்போதைய சவாலையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவ் அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை ஆசியாவில் வேகமாக வளர்ச்சியடையும் நாடு என சர்வதேச நாணய நிதியம் 2014 ஆம் ஆண்டு குறிப்பிட்டது. 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான தீவிர யுத்த காலத்தில் தேசிய பொருளாதார வளர்ச்சி வீதம் 6 சதவீதமாகக் காணப்பட்டது. 2010 தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வகையான காலகட்டத்தில் பொருளாதார வளர்ச்சி வீதம் 7.4 சதவீதமாக உயர்வடைந்தது.

2005ஆம் ஆண்டு மொத்த தேசிய உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்ட 90 சதவீத மொத்த அரச கடன் சுமை 2014ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் 75 சதவீதமாக குறைவடைந்தது.

2005ஆம் ஆண்டு ஆயிரத்து 999 ஆக காணப்பட்ட பங்குச் சந்தை மொத்த விலைச் சுட்டி 2014 ஆம் ஆண்டு 7 ஆயிரத்து 299 ஆக உயர்வடைந்தது.

அத்துடன் 2015இல் ஆயிரத்து 242 அமெரிக்க டொலராக காணப்பட்ட தனிநபர் வருமானம் 2014ஆம் ஆண்டு 3 ஆயிரத்து 819 அமெரிக்க டொலராக அதாவது மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டது.

சுதந்திரம் பெற்றதன் பின்னர் 2006-2014 வரையான காலப் பகுதியில் உட்கட்டமைப்பு துரிதமாக அபிவிருத்தி செய்யப்பட்டது. இந்த அனைத்து வெற்றிகளும் பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

2007 இல் பாரிய உலக உணவுத் தட்டுப்பாடு, 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் பாரிய நிதி நெருக்கடி, கனிய எண்ணெய் பற்றாக்குறை விலையேற்றம் உள்ளிட்ட பாரிய சவால்கள் காணப்பட்டன.

சவால்களுக்கு மத்தியில் பெற்றுக் கொண்ட வெற்றி, பொருளாதார முன்னேற்றம் ஆகியன 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தால் தலைகீழாக மாற்றியமைக்கப்பட்டது.

2014ஆம் ஆண்டு ஒரு டொலருக்கான ரூபாவின் பெறுமதி 130 ரூபாவாக காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டு ஒரு டொலருக்கான ரூபாவின் பெறுமதி 181 ரூபாவாக உயர்வடைந்தது.

2014 ஆம் ஆண்டு மொத்த அரச கடன் சுமை 7.39 ட்ரில்லியனாக காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டு இந்த தொகை 12.89 ட்ரில்லியனாக உயர்வடைந்தது. குறுகிய காலத்தில் அரச கடன்சுமை 74.4 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கம் 2015 தொடக்கம் 2019 ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் சவரிங் பொன்ட், இலங்கை அபிவிருத்தி பிணை, சின்டிகேட் லோன் உள்ளிட்ட வழிமுறைகள் ஊடாக 26 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப் பெற்றது. 2015ஆம் ஆண்டு 7 ஆயிரத்து 299 விலைச்சுட்டியாக காணப்பட்ட பங்குச்சந்தை 2019 ஆம் ஆண்டு 5ஆயிரத்து 990 ஆக குறைவடைந்தது.

நல்லாட்சி அரசாங்கம் பொருளாதாரத்தைப் பலவீனப்படுத்தியதற்கு உரிய காரணிகளை குறிப்பிடமுடியாது. 2015 - 2019 வரையான காலப்பகுதியில் இந்தியா, பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகள் பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்துள்ளன.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை மேலும் பலவீனப்படுத்தியது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்த ஆட்சியையே பொறுப்பேற்றார். கொவிட்-19 வைரஸ் தாக்கம் இந்நிலையை மேலும் பலவீனப்படுத்தியுள்ளது.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை ஆரம்பத்தில் இருந்து முன்னெடுத்துள்ளது. அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஜனாதிபதி செயலாளர் பி.பி.ஜயசுந்தர குறிப்பிட்டதை எதிர்த்தரப்பினர் அரசியல் தேவைக்கு பயன்படுத்திக் கொண்டார்கள். 2006-2016 ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில் பொருளாதாரத் துறையில் இவர் உயரிய பதவி வகித்தார்.

பிறர் மீது சேறு பூசல், பொய் குற்றச்சாட்டை முன்வைக்கும் எதிர்த்தரப்பினர் கொவிட்-19 வைரஸ் விவகாரத்தையும் அரசியலாக்கி விட்டார்கள்.

கொரோனா வைரஸ் தாக்கத்தின் போது, தனது நாடு பொருளாதார ரீதியில் முன்னேறியிருந்தமையினால் கொவிட்-19 வைரஸைக் கட்டுப்படுத்த முடிந்தது என ஜேர்மனி சான்சலர் எஞ்சலோ மெர்கல் குறிப்பிட்டுள்ளார். எம்மால் இவ்வாறு குறிப்பிட முடியாது. இருப்பினும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம்.

தற்போது நாடு எந்த நிலையில் காணப்படுகின்றது என்பதை உணர்ந்து மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். தற்போதைய நெருக்கடியான நிலைமையை அனைவரும் ஒன்றிணைந்தால் மாத்திரமே எதிர்கொள்ளமுடியும் என அவர் அவ் அறிக்கையில் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# மக்கள் ஐ.தே.கவை முழுமையாக புறக்கணிப்பர்

## சந்திம திட்டவட்டம்

(கொழும்பு)

பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தரப்பினர் செயற்பட வேண்டும என்றும் ஐக்கிய தேசியக் கட்சியினை மக்கள் பொதுத் தேர்தல் ஊடாக இம்முறை முழுமையாகப் புறக்கணிப்பார்கள் என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.



பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத்தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொவிட்-19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்ததன் பிறகே ஊரடங்குச் சட்டம் பகுதியளவில் தளர்த்தப்பட்டது. மக்களின் இயல்பு வாழ்க்கையும் வழமை நிலைக்குத் திரும்பியது.

5 ஆயிரம் ரூபா நிவாரண நிதி மக்களுக்கு அரசியல் கட்சி வேறுபாடின்றி வழங்கப்பட்டது.எதிர்த்தரப்பினர் தங்களின் அரசியல் தேவைகளுக்கு இந்த நிவாரண நிதி விவகாரத்தை பயன்படுத்திக் கொண்டார்கள்.

பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தரப்பினர் செயற்பட வேண்டும்.

நாட்டில் எதிர்க்கட்சி பொறுப்பற்ற விதமாக செயற்பட்டால் அரசாங்கத்தின் குறைகளை சுட்டிக்காட்டும் நிலை இல்லாமல் போகும். இது அரசாங்கம் சர்வாதிகாரமாக செயற்படுவதற்கும் காரணமாக அமையும்.

ஐக்கிய தேசியக் கட்சியினை மக்கள் தற்போது புறக்கணித்து வருகிறார்கள். பொதுத்தேர்தல் ஊடாக இம்முறை ஐக்கிய தேசியக் கட்சி முழுமையாக வெறுத்தொதுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஆழ்மனப் பூசல்!

ஒரு ஏழை விவசாயி. எங்கேயோ வெளியில் புறப்பட்டுக் கொண்டிருந்தான். அந்தச்சமயம் பார்த்து சிறுவயது சிநேகி தன் ஒருத்தன் அவனைப் பார்ப்பதற்காக வந்தான். "சிறிது நேரம் வீட்டிலே உட்காரு. சில நண்பர்களைப் பார்த்துவிட்டு வருகிறேன். பின்பு நாம் சாவகாசமாக பேசுவோம் என்றான்.

நானும் உன்னுடன் வருகிறேன். ஆனால் அதற்கு நீ ஒரு உதவி செய்யவேண்டும் என்றான் அவன். என்ன? என்று கேட்டான் இவன்.

"என்னுடைய உடை நன்றாக இல்லை. அழுக்காக இருக்கிறது. உன்னிடம் விலையுயர்ந்த ஆடைகள் ஏதாவது இருந்தால் தா. அதை போட்டுக்கொண்டு வருகிறேன். திரும்பி வந்ததும் கொடுத்து விடுகிறேன் என்றான். அவன் பார்த்தான். சிறிது காலத்துக்கு முன்பு ராஜா அவனுக்குப் பரிசாக கொடு த்த விலை உயர்ந்த ஆடைகள் பெட்டியில் இருந்தன. அதை எடுத்துக் கொடுத்தான். இவன் வாங்கிப் போட்டுவிட்டான். பார்ப்பதற்கு ராஜா மர்திரி இருந்தான் நண்பன்.

உடை கடன் கொடுத்த இவன் நண்பனே இவன் தோற்றத்தைப் பார்த்துப் பொறாமைப்பட ஆரம்பித்தான். "என்ன இது இவன் என்னுடைய உடையை வாங்கிப் போட்டிருக்கிறான். அவனைப்பார்த்தால் ராஜா மாதிரி இருக்கிறான். என்னைப் பார்த்தால் அவனுக்கு வேலைக்காரன் போல் தெரிகிறது. இந்த உடையை அவனிடம் கொடுத்தது தவறாக போய்விட்டதே என்று நினைத்தான்.

அவனுக்குள்ளேயே இன்னொரு மனது.. இந்த கோட்டிலும் தலைப்பாகையிலும் என்ன இருக்கு என்று யோசித்தான். "இவன் நமக்கு நல்ல நண்பன். அவனுக்கு நாம் இதைக்கூட செய்யக் கூடாதா? என்று நினைத்தான்.

மனதுக்குள் ஒரு விவாதம் நடக்கிறது. இருந்தாலும் அந்த உடை தான் அவன் மனதிலே அதிக இடத்தைப் பிடித்தது.

அவர்கள் பார்க்க வேண்டிய நண்பன் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். அவனிடம் இவன் சொல்கிறான். "இவன் என்னுடைய பால்ய நண்பன். கூட அழைத்துக்கொண்டு வந்தேன். ரொம்ப நல்லவன். அவன் போட்டிருக்கானே உடை அது என்னுடையது" என்றான்.

நண்பனுக்கு அதிர்ச்சி. இவனும் அதற்குப் பிறகு தான் யோசித்தான். "உடை விடயத்தை சொல்லியிருக்க வேண்டியதில்லை" என்று. நண்பனிடம் மன்னிப்புக்கேட்டான். இனி மேல் எச்சரிக்கையாக இருப்பேன் என்றான். உடை என்னுடையது உன்னுடையது என்று சொல்லக்கூடாது என்று முடிவு எடுத்தான். இரண்டு பேரும் இன்னொருத்தர் வீட்டுக்குப் போனார்கள். அங்கே அறிமுகத்தை ஆரம்பித்தான்.

"இவன் என்னுடைய பால்ய நண்பன். கூட அழைத்துக் கொண்டு வந்தேன். ரொம்ப நல்லவன். அப்புறம் ஒரு முக்கியமான விடயம். அவன் போட்டிருக்கும் உடை அவனுடையது தான். என்னுடையது இல்லை "என்றான்.

இது முதலில் சொன்னதை விட மோசம். இரண்டு பேரும் வெளியிலே வந்தார்கள். " என்னை மன்னித்துக்கொள் எச்சரிக்கையாக தான் இருந்தேன். வாய் தவறி உளறி விட்டேன். இனி மேல் உன்னை அறிமுகப்படுத்தும் போது இந்த உடை விடயத்தை சொல்லவே வேண்டாம் என்று முடிவு செய்துவிட்டேன் என்றான்.

அந்த இரண்டு பேருமாக சேர்ந்து மூன்றாவதாக ஒருத்தர் வீட்டுக்குப் போய் சேர்ந்தார்கள். அங்கே இவன் மிகவும் கவனமாக அறிமுகப்படுத்த ஆரம்பித்தான். "இவன் என்னுடைய பால்ய நண்பன். கூட அழைத்துக்கொண்டு வந்தேன். ரொம்ப நல்லவன். அப்புறம் அந்த உடை விடயம் தானே. மன்னித்துக் கொள்ளுங்கள். அதைப்பற்றி நான் எதுவும் சொல்ல மாட்டேன். ஏனென்றால் சொல்லமாட்டேன் என்று நான் சபதம் எடுத்திருக்கிறேன் என்றான்.

இது எல்லாவற்றையும் விட மோசம்! இந்தக் கதையை கொஞ்சம் ஆழமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமது பலவீனங்கள் எதுவோ அதுவே நாமாக இருக்கிறோம். ஆனால் நம்முடைய பலவீனங்களை அடக்குவதற்கு தீர்மானிக்கின்றோம். அதனால் இயற்கையாகவே அது நமது ஆழ்மனதிலே பூசல்களுக்கு மூல காரணம் ஆகிறது.

நான் துறவியாக இருக்கப்போகிறேன் என்று ஒருத்தன் குரலை உயர்த்திச் சொல்கிறான் என்றால் அதற்கு நேர் எதிரான எண்ணம் அவனுக்குள்ளேயே இருந்து தாங்க முடியாமல் வெளியிலே வருகின்றது என்று அர்த்தம் என்றார் ஓஷோ.

இந்தக் கால துறவி ஒருவர் தன்னுடைய சிஷ்யனுக்கு வாயை ஒரு துணியாலே இறுக்கிக் கட்டி வைத்திருந்தார். "எதற்கு இப்படி உங்கள் சீடருக்கு மௌனத்தின் மகிமையை உணர்த்துவதற்காகவா இப்படிச் செய்து வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"அட நீங்கள் வேறு. அவன் இன்றிலிருந்து என்னைப் பற்றிய உண்மைகளைப் பேசப் போவதாக சபதம் எடுத்திருக்கிறான். அதற்காகத்தான் அவன் வாயிலேயே துணியைத் திணித்து கட்டிப் போட்டிருக்கிறேன் என்றார் அந்த குரு.

பேசப் போவது எல்லாவற்றையும் நன்றாக யோசி. ஆனால், யோசிப்பதை எல்லாம் பேசிவிடாதே.
– டெலானி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## முன்மாதிரித் தலைவர்கள் இல்லாத உலகமாயிற்று

முன்மாதிரி என்ற தமிழ்ச் சொல் மிகவும் பெறுமதி வாய்ந்தது. எனினும் இன்றைய சமகாலத்தில் முன்மாதிரி என்ற சொற்பதத்துக்காக சுட்டுவிரல்கள் காட்டக்கூடிய எண்ணிக்கை மிகக் குறைவு.

அதிலும் தேசத் தலைவர்கள் என்றிருப்போரில் அந்தத் தலைவனைப் பார் அவரின் உயர்ந்த மனிதநேயத்தைப் பார் என்று சொல்வதற்கு யாருளர் என்று ஏங்க வேண்டியுள்ளது.

முன்னைய காலத்தில் மன்னர்கள் மக்களுக்காக வாழ்ந்தனர்.

அதிலும் தமிழ் மன்னர்களின் நேர்மைத் திறத்துக்கு உலகில் யாரும் ஈடில்லை எனலாம்.

ஆம், மனுநீதிச்சோழ மன்னன் ஒரு பசுவின் துயர் துடைக்க தன் மகனையே தேர்க்காலால் மிதித்துக் கொன்றான் எனில், அவனிடம் இருந்த நீதிநெறி எத்துணை உயர்வான தென்பதை யாம் கூறி எவரும் தெரிய வேண்டியதில்லை.

இதுபோல தமிழ் மன்னர்கள் பலரை நாம் சுட்டிக் காட்ட முடியும்.

அஃது ஒரு காலம் என்றால், இல்லை. கடந்துபோன காலங்களில் தங்களை அர்ப்பணித்த தலைவர்கள் பலர் இருந்துள்ளனர்.

மகாத்மா காந்தி, ஆபிரகாம் லிங்கன், நெல்சன் மண்டேலா, டாக்டர் அப்துல் கலாம் என்றவாறு தியாகம் நிறைந்த தேசத் தலைவர்களைச் சுட்டி நிற்க முடியும்.

ஆனால் இப்போதுள்ள சமகாலத்தில், நல்ல தலைவர்களுக்கும் பஞ்சம். அவர் நல்ல தலைவர் என்று சொல்லக்கூடிய மக்களுக்கும் பஞ்சம் என்று வந்துவிட்டபோது எல்லாமும் ஐயத்துக்குரியதாயிற்று.

நல்லதை நல்லது என்று சொல்ல வல்ல துணிவு ஒருவரிடமும் இல்லை என்றபோது நல்ல தலைவர்களை இனம் காண்பதும் கடினமே.

எதுவாயினும் நாட்டின் – தேசத்தின் தலைவர்களாக இருக்கின்றவர்கள் உணர்ச்சி வசப்படாமல் பொறுமைமிக்கவர்களாக இருக்க வேண்டும்.

இல்லையேல், அவர்களின் கருத்துக்கள் பொதுச் சட்டங்களை, பொது விழுமியங்களைத் தகர்த்தெறிந்து விடும்.

இதற்கு நல்ல உதாரணம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் அண்மையில் கூறிய கருத்தாகும்.

அதாவது நீதிமன்றம் தீர்ப்பளித்தாலும் பாராளுமன்றத்தைக் கூட்டமாட்டேன் என ஜனாதிபதி கூறியிருந்தார்.

இந்த நாட்டின் ஜனாதிபதி தனக்கு இருக்கக் கூடிய அதிகாரத்தை மேற்போந்த கருத்தினூடாகத் தெரிவிப்பதாக நினைத்திருக்கலாம்.

ஆனால் அதற்கு வேறு வழிகளும் வேறு சொற்பிரயோகங்களும் உண்டு.

மாறாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தாலும் பாராளுமன்றத்தைக் கூட்டமாட்டேன் என்று கூறியதனூடாக நீதிமன்றத்தை மதிக்க வேண்டும் என்ற எண்ணப்பாட்டில் வழு ஏற்படுத்தப்படுகின்றது.

இத்தகைய சொற்பிரயோகங்கள் நீதிமன்றத்துக்கான உயர் மதிப்பை குறைப்பதாக இருந்தால் அது ஒட்டுமொத்த நாட்டுக்கும் பங்கமாகும்.

இனிவே முன்மாதிரியான தலைவர்கள் இல்லாவிட்டாலும் பரவாயில்லை.

இருக்கின்ற கட்டமைப்பையேனும் பாதுகாக்கின்ற அளவில் நடந்து கொள்ள வேண்டும் என்பதுதான் இன்றைய காலத்தில் வலியுறுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

# எதிர்வரும் பொதுத்தேர்தலில் புதிய முறைகளை முன்மொழிந்து தெளிவுபடுத்தலை வழங்க வேண்டும்

## தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் பிமல் வேண்டுகோள்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அறிமுகப்படுத்தக் கூடிய புதிய முறைகளை முன்மொழிந்து தேர்தல்கள் ஆணைக்குழு அரசியல் கட்சிகளுக்கான தெளிவுபடுத்தலை வழங்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க கேட்டுக் கொண்டார்.

கொவிட் - 19 கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஏற்கனவே நடைபெறவிருந்த பொதுத்தேர்தல் பிற்போடப்பட்டுள்ள நிலையில், தற்போதுள்ள நிலைக்கு ஏற்றவாறான தேர்தல் நடைமுறைகள் தொடர்பில் முன்மொழிவுகளைச் செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அனைத்துக் கட்சிகளிடமும் கோரியுள்ளது. இதனைச் சுட்டிக்காட்டியே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். எனினும் இவ் விடயத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு அதன்முன்மொழிவுகள்மூலம்உண்மைமேலும் தெளிவுபெற செய்ய வேண்டும் என்று அவர் மேலும் கேட்டுக்கொண்டார். (ஜ-4)

## கொழும்பு-கம்பஹா மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு போக்குவரத்து ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களுக்கிடையிலான பொதுப்போக்குவரத்துசேவை சுகாதார அமைச்சு பரிந்துரை செய்யும் பட்சத்திலேயே முன்னெடுக்கப்படும் என பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கொழும்பு,கம்பஹா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கிடையிலான பொதுப் போக்குவரத்துச் சேவை இன்று முதல் முன்னெடுக்கப்படுகிறது.

சுகாதார அமைச்சு பரிந்துரை செய்யும் பட்சத்தில் கொழும்பு, கம்பஹா மாவட்டங்களுக்கிடையிலான முழுமையான போக்குவரத்து சேவை முன்னெடுக்கப்படும். போக்குவரத்து சேவைகள் அதிகாலை 4.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு மாலை 6 மணிக்கு நிறுத்தப்படும். இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளுக்கும் தனியார் பேருந்துகளுக்கும் தேவையான அனைத்து ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைய போக்குவரத்து சேவைகள் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.(ஜ-8)

## நாட்டில் இதுவரை 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கொரோனா பரிசோதனைகள்

(கொழும்பு)

நாட்டில் இதுவரை 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்றை கண்டறிவதற்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

பெருமளவிலான பி.சி. ஆர். பரிசோதனைகள் பொரளையிலுள்ள மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திலேயே மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய கொரோனா வைரஸ் ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டு அதனூடாக சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதில் 16 ஆயிரத்து 59 பி.சி.ஆர். பரிசோதனைகள் பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாளொன்றுக்கு சுமார் 3 ஆயிரம் பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேவைப்படின் எதிர்காலத்தில் தினமும் 6 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு சேவைகள் விரிவுபடுத்தப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

## ரயில்வே திணைக்களத்திற்கு 900 இலட்சம் ரூபா நட்டம்

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் காரணமாக ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதனால் ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டன.

இதனால்ரயில்வேதிணைக்களத்திற்கு 900 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அத்திணைக்களம் மேலும் தெரிவிக்கையில்,

நாளாந்தம் சுமார் 450 ரயில் சேவைகள் நடத்தப்பட்டன. குறுகிய மற்றும் நீண்ட ரயில் சேவைகளையே நடத்தப்பட்டு வந்தன.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பதுளை உட்பட பல பகுதிகளுக்கு தபால் ரயில் சேவைகளும் நடத்தப்பட்டன.

இதைத்தவிர சரக்கு ரயில சேவைகளும் நடத்தப்பட்டன. இந்த அனைத்து சேவைகளும கடந்த இரண்டு மாதங்களாக இடம்பெறவில்லை.

இதனால்ரயில்வேதிணைக்களத்திற்கு 900 இலட்சம் ரூபாவரை நட்டம் ஏற்பட்டுள்ளது.

தற்பொழுது நாளாந்தம் 10 அல்லது 15 ரயில் சேவைகளே நடத்தப்பட்டு வருகின்றன.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்படவிருப்பதால் ரயில்வே சேவைகள்வழமைக்கு திரும்பும் என மேலும் தெரிவித்துள்ளது. (ஜ-4)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### உண்மையான வழிபாடு



கடவுள் மீது நாம் எந்த உருவத்தையும் புகுத்திவிட முடியாது. ஆனால் நமக்குப் பிடித்த எதில் வேண்டுமானாலும் கடவுளைப் புகுத்தலாம். அதாவது நீங்கள் வழிபடும் உருவத்தில் மட்டுமே கடவுள் இருக்கிறார் என்று நினைக்காதீர்கள். மக்கள் வணங்கும் எல்லா உருவங்களிலும் அவர் இருக்கிறார் என்று நினையுங்கள். அப்போது நீங்கள் ஒரு பூனையில்கூட கடவுளை வணங்கலாம். பூனையை மறந்து அதைக் கடவுளாக நினைத்து வழிபடுங்கள். அவ்வாறு நீங்கள்செய்வது தவறல்ல. ஏனென்றால் அவரிடம் இருந்து தான் எல்லாம் வருகின்றன. அவர் அனைத்துப் பொருட்களிலும் இருக்கிறார்.

கடவுள் என்ற ஓவியத்தை வழிபடலாம். ஆனால் ஓவியத்தையே கடவுள் என்று வழிபடக் கூடாது. கடவுள் ஓவியத்தில் இருக்கிறார் என்பது சரிதான். ஆனால் ஓவியமே ஆண்டவன் என்பது தவறு. கடவுள் சிலையில் இருக்கிறார் என்பது சரி. அதில் ஆபத்தில்லை. இதுதான் உண்மையான வழிபாடு.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**பிறருக்குக் கொடுத்து மகிழ்வதில்தான் உண்மையான இன்பம் இருக்கிறது. அதனால் நம்முடைய செல்வமும் பெருகும். தன்னுடையது என்று உரிமை கொண்டாடும் எண்ணத்தால் துன்பமே உண்டாகும். -வினோபா**

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**வவுனியா பிரதேசத்தில்** கிறிஸ்தவகுளம் பிரதேசத்திலும்

**மன்னார் பிரதேசத்தில** வட்டுப்பித்தன்மடு, புதுக்காமம், காலை 10 மணியிலிருந்து 2 மணிவரை தரவன் கோட்டைப் பிரதேசம், சாந்திபுரம் புகையிரத நிலையப் பிரதேசம், கடலேரி, South Bar இராணுவ முகாம், தள்ளாடி இராணுவமுகாம், தள்ளாடியயலைக் தொலைத் தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# இறுக்கும் சீனாவின் கரங்களை உடைக்க ஹொங்கொங்கில் பாரிய ஆர்ப்பாட்டம்!

(ஹொங்கொங்)

**சீனாவினால் அமுல்படுத்த திட்டமிடப்படும் தேசிய பாதுகாப்புச் சட்டத்திற்கு எதிராக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஹொங்கொங்கில் போராட்டம் வெடித்தது.**






ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கானவர்களை கலைக்க ஹொங்கொங் பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகித்தனர். கடந்த ஆண்டு ஹொங்கொங்கில் நடந்த பெரும் போராட்டக்காலம் மீள திரும்புவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

காஸ்வேபே மற்றும் வான் சாய் மாவட்டங்களில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்த போராட்டங்கள் இடம் பெற்றன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தடுப்புகளை அமைத்து, தமது ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி கோஷங்களை எழுப்பினர். கடந்த ஆண்டு அரசாங்க எதிர்ப்பு போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் மிருகத்தனமாக நடந்ததாகக் கூறப்படும் விசாரணையும் இந்தக் கோரிக்கைகளில் அடங்கியுள்ளது.

“ஹொங்கொங் சுதந்திரமே ஒரே வழி”, "நான் ஹொங்கொங்கின் சுதந்திரத்தை ஆதரிக்கிறேன்" உள்ளிட்ட பல பதாதைகளை போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

இப் போராட்டம், கொரோனா முடக்கத்தின் பின்னர் நடந்த பெரிய போராட்டமாக கருதப்படுகிறது. ஆயிரக்கணக்கானவர்கள் வீதிகளில் திரண்டனர்.

மக்கள் கூட்டம் கூட முடியாது எனப் பொலிஸார் எச்சரித்த போதும், போராட்டக்காரர்கள் குவிந் தனர்.கொரோனா அபாய கட்டத்தில் உள்ளதால் அவர்களை கலைக்க கண்ணீர்ப் புகை, நீர்த்தாரை பிரயோகிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போராட்டக்காரர்கள் 40 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (2-5)

# இத்தாலி மியூசியத்தில் சமூக இடைவெளியை பேண எலெக்ட்ரோனிக் கருவி



(ரோம்)

இத்தாலி மியூசியம் ஒன்று பார்வையாளர்கள் சமூக இடை வெளியைக் கடைப்பிடிக்கும் வித மாக எலெக்ட்ரோனிக் டேக்கை பயன்படுத்த ஆரம்பித்துள்ளது. ஐரோப்பிய நாடுகளில் கொரோ னாவால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடுகளில் இத்தாலியும் ஒன்று. சுமார் 32 ஆயிரத்து 735 பேர் கொரோனாவுக்கு உயிரிழந்துள்ளனர்.

இத்தாலியின் பெர்காமோ என்ற இடத்தில் அகாடெமியா கர்ராரா மியூசியம் ஒன்று உள்ளது. சுமார் 70 நாட்களுக்குப் பின் மே 22 ஆம் திகதி திறக்கப்பட்டது.

இந்த மியூசியத்தில் உள்ள ஓவியக் கண்காட்சியகத்தைப் பார்வையிட வரும் பார்வையாளர்கள் சமூக இடைவெளியை பின்பற்றுவதை உறுதி செய்ய எலெக்ட்ரிக் டேக்கை உருவாக்கியுள்ளது. பார்வையாளர்கள் எலெக்ட்ரிக் டேக்கை கையில் கட்டாயம் அணிய வேண்டும். அப்படி அணி ந்திருக்கும்போது ஒருவர் மற்றொருவரிடம் இருந்து 1.5 மீற்றர் இடைவெளி விட்டு நிற்க்வில்லை என்றால் எலெக்ட்ரிக் டேக் அதி ர்வை ஏற்படுத்தும். மேலும்எல்.இ.டி லைட்டும் எரியும். இதன் மூலம் அவர்கள்சமூக இடைவெளியை உறுதி செய்து கொள்வார்கள்.

ஆகவே, மியூசியத்தில் பணி புரிபவர்கள் சமூக இடைவெளியை கண்காணிக்க வேண்டிய அவசியமேயில்லை. (2-5)

# பிரேஸில்-அமெரிக்கா பயணங்களுக்கு தடை

(வோஷிங்டன்)

கொவிட்-19 தொற்றுநோய் அதிகரித்து வரும் பிரேஸிலில் இருந்து அமெரிக்காவிற்கான பயணத்தை தடை செய்வதாக ட்ரம்ப் தெரிவித்தார்.

சீனா மற்றும் ஐரோப்பாவிற்கான பயணங்களுக்கு முன்னர் தடை விதிக்கப்பட்டது போல் பிரேஸிலுக்கும் தடை விதித்திருப்பதாக வெள்ளை மாளிகையின் பத்திரிகை செயலாளர் கெய்லீ மெக்னானி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரையில் பிரேஸிலில் 3 இலட்சத்து 65 ஆயிரத்து 213 உறுதிப்படுத்தப்பட்ட கொவிட்- 19 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

இது உலகில் உறுதிப் படுத்தப்பட்ட இரண்டாவது அதிக எண்ணிக்கை ஆகும்.

இந்தப் பயணத்தடை நடவடிக்கை பிரேஸில் நாட்டவர்கள் நம் நாட்டைப் போன்று கூடுதல் தொற்று நோய்களுக்கு உள்ளாகாது இருக்க உதவும். புதிய பயணக் கட்டுப்பாடுகள் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக ஓட்டத்தை எந்த வகையிலும் பாதிக்காது என அவர் மேலும் தெரிவித்தார். (2-8)

# கொலைகார கொரோனா வைரஸை கொல்லும் மருந்தை கண்டுபிடித்து விட்டோம்

## ரஷ்ய மருத்துவக்குழு தெரிவிப்பு

(மொஸ்கொ)

கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு ரஷ்யா மருந்து கண்டு பிடித்துள்ளது.

இந்த மருந்து மீதான மருத்துவ பரிசோதனைகள் 8 வாரங்களில் முடிந்து விடும் என தெரிய வந்துள்ளது.

கொரோனா வைரஸ் ஆரம்பத்தில் ரஷ்ய நாட்டில் பெரிய அளவில் பரவவில்லை. ஆனால் சமீப காலமாக அங்கு அதிகளவில் பரவி உயிரிழப்பை ஏற்படுத்தி வருகிறது.

நேற்று முன்தினம் மதிய நிலவரப்படி ரஷ்யாவில் சுமார் 3 இலட்சத்து 45 ஆயிரம் பேருக்கு வைரஸ் தொற்று பாதிப்பு உள்ளதாகவும், 3,500-க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளதாகவும் அமெரிக்காவின் ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழக கொரோனா தரவு மையம் தெரிவித்தது.

கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசி மற்றும் மருந்து கண்டு பிடிக்கும் முயற்சியில் உலகின் பிற நாடுகளுடன் ரஷ்யாவும் களத்தில் உள்ளது.

இந்நிலையில் ரஷ்யாவில் உள்ள பாவிபிராவிர் மருந்து நிறுவனம், 'அரேப்லிவிர்' என்ற பெயரில் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க ஒரு மருந்தைக் கண்டுபிடித்துள்ளது.

இந்த மருந்து குறித்த மருத்துவ பரிசோதனைகள் 4 முதல் 8 வாரங்களுக்குள் முடிந்து விடும் என்று ரஷ்ய சுகாதார அமைச்சகத்தின் தலைமை சிறுநீரக மருத்துவரும், இந்த மருந்து ஆராய்ச்சிக்கு பொறுப்பேற்றுள்ள நிபுணருமான டிமிட்ரி புஷ்கர் தெரிவித்துள்ளார். (2-5)

# உலக நாடுகளை கொரோனா ஆட்டிப்படைக்க அணுகுண்டை மேம்படுத்தும் கலந்துரையாடல்

## வடகொரிய ஜனாதிபதி அதிரடி



(பியாங்யாங்)

வடகொரியா தலைநகர் பியாங்யாங்கில் நடந்த ஒரு முக்கிய இராணுவ கூட்டத்தில் தலைவர் கிம் ஜாங் உன் கலந்துகொண்டு வட கொரியாவின் அணு ஆயுதங்களை மேம்படுத்துவது தொடர்பாக விவாதிக்கப்பட்டது என உள்ளகத்தகவல்கள் தெரிவித்தன.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுக்கு இதய அறுவை சிகிச்சை நடந்ததாகவும் அது தோல்வியடைந்ததால் அவர் மூளைச்சாவு அடைந்து விட்டதாகவும் கடந்த மாதம் பல வதந்திகள் பரவின. இதையடுத்து, வட கொரிய ஜனாதிபதி உண்மையான நிலையை அறிந்துகொள்ள பல நாடுகளும் முனைப்புக் காட்டின. இறுதியாக ஒரு உரத் தொழிற்சாலையின் திறப்பு விழாவில் கிம் ஜாங் உன் கலந்துகொண்டு வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வடகொரியா தலைநகர் பியாங்யாங்கில் நடந்த ஒரு முக்கிய இராணுவ கூட்டத்தில் தலைவர் கிம் ஜாங் உன் கலந்து கொண்டதாக அந்நாட்டின் அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த கூட்டத்தில் வட கொரியாவின் அணு ஆயுதங்களை மேம்படுத்துவது, நாட்டின் ஆயுதப் படைகளை மிகுந்த எச்சரிக்கையுடன் வைப்பது மற்றும் பிறநாட்டிலிருந்து வரும் அச்சுறுதல்களுக்கு எதிராக தங்கள் நாட்டின் சக்தியை அதிகரிப்பது தொடர்பாக விவாதிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-5)

## துன்னாலையில்...

யில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை துன்னாலை மேற்குப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில், விசாரணைகளை மேற்கொண்ட நெல்லியடிப் பொலிஸார் வாள் வெட்டை மேற்கொண்ட சந்தேகநபரை கைது செய்துள்ளதுடன் வாளினையும் கைப்பற்றியுள்ளனர். (ம-3,60)

## மோ.சைக்கிள்...

பகுதியில் இடம்பெற்ற குறித்த விபத்தில் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த வவுனியா, திருநாவற்குளத்தைச் சேர்ந்த கிறிஸ்ரி (வயது - 39) என்ற இளம் குடும்பஸ்தரே மரணமடைந்தவராவார்.

படுகாயமடைந்த மற்றைய நபர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,114,299)

## நாடு முழுவதும்...

ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பில், ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்று முதல் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை தினமும் இரவு 10.00 மணி முதல் அதிகாலை 4.00 மணி வரை மட்டுமே அமுல் படுத்தப்படும்.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட போதும் தொழிற்சாலைகள், நிறுவனங்கள், அலுவலகங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் பணிகளை மேற்கொள்ளும் போதும், பயணிகள் போக்குவரத்தின் போதும் கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார அதிகாரிகளால் பரிந்துரைக்கப்பட்டுள்ள நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும்.

நோய்த்தொற்று நீக்குதல், முகக்கவசங்களை அணிதல், அடிக்கடி கைகளை கழுவுதல் மற்றும் சமூக இடைவெளியை பேணுதல் இவற்றில் அடங்கும்.

அரச, தனியார் துறை நிறுவனங்களில் சேவைக்கு அழைக்கப்படும் ஊழியர் எண்ணிக்கை மற்றும் யாரை சேவைக்கு அழைப்பது என்பதை அந்த நிறுவனங்கள் வழங்கும் சேவைகள் மற்றும் சுகாதார வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கும் அதிகாரம் குறித்த நிறுவனங்களின் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட பின்னரும் சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றி நாளாந்தப் பணிகளில் ஈடுபடுமாறு அரசாங்கம் மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

அத்துடன் இன்று முதல் கொழும்பு மற்றும் கம்பஹா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்திற்கு அனுமதியளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## கழுத்தில் கயிறு...

விளையாடிக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக கழுத்தில் கயிறு இறுகியதால் 13 வயது ஈழத்துச் சிறுமி ஒருவர் லண்டனில் மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதில் லண்டனில் வசித்து வரும் மண்டைதீவு, 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குலசிங்கம் சரண்ஜா (வயது-13) என்ற சிறுமியே உயிரிழந்தவர் ஆவார்.

கழுத்தில் கயிறு போட்டு விளையாடிக் கொண்டிருந்த நிலையில் எதிர்பாராத விதமாக கயிறு கழுத்தை இறுக்கிக் கொண்டதாலேயே குறித்த சிறுமி உயிரிழந்துள்ளாரெனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

## வன்முறைக் கும்ப...

உடுவில் அம்பலவாணர் பகுதியில் நேற்று திங்கட்கிழமை மாலை மூவரும் கைது செய்யப்பட்டனர்.

சம்பந்தப்பட்ட இடத்தில் பெருமளவு கூரிய ஆயுதங்களுடன் சந்தேகத்துக்கு இடமான வகையில் சிலர் நடமாடுவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சுன்னாகம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான அணியினரால் சுற்றுக்காவல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வீடொன்றுக்குள் பதுங்கியிருந்த மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மூவரும் 25 வயதுக்குட்பட்டவர்கள்.

அவர்களிமிருந்து, தாக்குதல் ஒன்றுக்கு தயாராக வைத்திருந்த வாள்கள், கைகோடரிகள், வீசுவாள்கள், கிறிஸ் கத்திகள், கைபிடி பொருத்தப்பட்ட வயர்கள் என சுமார் 20 கூரிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. (ம-3)

## கொரோனா பலி...

இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

அவர் கோவிட் - 19 நோயால் பீடிக்கப்பட்டிருந்தமை பி.சி.ஆர் பரிசோதனையில் உறுதியாகி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த அவர், பயாகலை பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

கடந்த 20 ஆம் திகதி 466 பேர் கொண்ட குழுவினருடன் அவர் குவைத்திலிருந்து நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தபோது உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் இதய நோயினால் பாதிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சடலம் தொடர்பான இறுதிக் கிரியைகள் தனிமைப்படுத்தல் நடைமுறைகளுக்கு அமைய மேற்கொள்ளப்படவுள்ளன. (ம-3)

## நடிகையைப் பார்...

இளம் யுவதி ஒருவர் விபரீத முடிவெடுத்ததில் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் கொட்டைக் காடு மல்லாகம் பகுதியை சேர்ந்த வயது 26 வயதுடைய தேனுஜா என்ற இளம் பெண்ணே மரணமானவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மல்லாகம் பகுதியில் வசித்து வரும் குறித்த யுவதி கடந்த ஒரு மாதமாக தென்னிந்திய சின்னத்திரை நடிகை ஆயிஷா என்பவரை பார்ப்பதற்கு தன்னை இந்தியா அழைத்து செல்லுமாறு கேட்டுள்ளார்.

எனினும் பெற்றோர்கள் தற்போது நாட்டில் கொரோனா வைரஸ் காரணமாக இப்போது செல்ல முடியாது பின்னர் அழைத்து செல்வதாக கூறி வந்துள்ளனர்.

இந்நிலையில் தன்னை கூட்டிச் செல்வதாக தொடர்ந்தும் ஏமாற்றுவதாகக் கூறி நேற்று முன்தினம் வீட்டில் மண்ணெண்ணெய் ஊற்றி தனக்கு தானே தீ வைத்துள்ளார்.

தீக்காயத்திற்கு உள்ளான யுவதியை உடனடியாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அன்றைய தினமே மாலை உயிரிழந்துள்ளார்.

இந்த இறப்பு தொடர்பான மரண விசாரணையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,9)

## புலி ஆதரவாளர்...



- மந்திகைப் பகுதியில் -

# இராணுவம் மீது தாக்குதல் சந்தேகநபர் நேற்று கைது

(யாழ்ப்பாணம்)

மந்திகை பகுதியில் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்திய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை மற்றும் சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் 3 கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய புத்தளத்தைச் சேர்ந்தவரே இராணுவச் சிப்பாய் மீது தாக்குதல் நடத்தியுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சாவகச்சேரியில் இடம்பெற்ற வழிப்பறிக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். புத்தளத்தைச் சேர்ந்த சந்தேக நபர் சாவகச்சேரியில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் சங்கிலிகள் இரண்டும் கைப்பற்றப்பட்டன.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் பருத்தித்துறையில் இரண்டு கொள்ளைச் சம்பவங்களில் தொடர்புடையவர் என்று அறியப்பட்டவர்.

அத்துடன், கடந்த 14ஆம் திகதி நள்ளிரவு மந்திகை வைத்தியசாலைக்கு முன்பாக வைத்து இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு கல் ஒன்றால் தாக்கிய சம்பவத்துடன் தனக்குத் தொடர்பு இருப்பதாக சந்தேகநபர் ஒப்புக் கொண்டுள்ளார்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார் என்றும் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான மாவட்டக் குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-3)

வந்த சிங்கம்பட்டி ஜமீன்தார் டி.என். எஸ் முருகதாஸ் தீர்த்தபதி (வயது-89) உடல் நலக்குறைவால் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

இவர் தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்காகப் பயிற்சி முகாம்கள் அமைக்க முயன்ற காலத்தில் இடம் தந்து உதவ முன்வந்தவர் என தி.மு.க. செய்தி தொடர்பாளர் கே.எஸ். ராதாகிருஷ்ணன் தனது முகநூல் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஜமீன்தார் முறை ஒழிப்புக்கு பின்னர் இந்தியாவில் முடிசூட்டி பட்டம் கட்டிய மன்னர்களில் கடைசி மன்னர் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## தேர்தல்கள்...

ஊடகம் ஒன்றின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், "கொரோனா அச்சுறுத்தல் நிலவி வரும் இந்தக் காலப்பகுதியில், பொதுத் தேர்தல் ஒன்றை எவ்வாறு நடத்துவது என்பது குறித்து நாம் கடந்த மார்ச் மாத ஆரம்பத் திலிருந்து, சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாடி வருகிறோம்.

சமூக இடைவெளி, முகக்கவச பாவனை, கையுறை பாவனை என்ற இந்த மூன்று முக்கிய விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து வருகிறோம். இது தொடர்பான விசேட திட்டமொன்றையும் நாம் தயாரித்து வருகிறோம்.

இந்தக் காரணங்கள் தவிர்ந்து, பொதுத் தேர்தலை பிற்போட வேண்டும் என்ற எண்ணம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எப்போதும் இருந்ததில்லை. ஆணைக்குழுவில் பிளவுகள், முரண்பாடுகளும் இல்லை என்பதை இவ்வேளையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மக்களுக்கு பாதிப்பேற்படாத வகையில் வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்பதில் தான் நாம் தீவிரம் காட்டுகிறோம். அத்தோடு, ஏப்ரல் மாதம் வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவில், அரசியல் லாபம் தேடப்பட்டதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்தன.

எனவே, ஜுன் மாதம் வழங்கப்படவுள்ள 5 ஆயிரம் ரூபாய் நிதியில் இந்தப் பிரச்சினை இருக்கக்கூடாது என்றுதான் நாம் வலியுறுத்தியிருந்தோம்.

எனினும், நாம் இந்தக் கொடுப்பனவை வழங்க வேண்டாம் என கூறவில்லை" எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## நோயாளர்களாக...

மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கோவிட் - 19 வைரஸ் பரவல் குறித்த சுகாதார அமைச்சின் அடுத்தகட்ட வேலைத் திட்டம் மற்றும் தற்போதுள்ள அச்சுறுத்தல் நிலைமைகள் குறித்து அம்மையத்தின் விசேட வைத்தியர் ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருபவர்களில் பலர் கோவிட் - 19 தொற்று நோய் தாக்கத்திற்கு உள்ளானவர்கள். அவ்வாறு இருக்கையில் அவர்கள் தனிமைப் படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில், தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும் நபர்களில் தொற்று நோயாளர்கள் குணப்படுத்தப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்ட போதிலும் கூட அவர்கள் மீண்டும் கோவிட் - 19 வைரஸ் தொற்று நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகும் வாய்ப்புகள் உள்ளது.

அதேபோல் தனிமைப்படுத்தல் செயற்பாடுகளின் போது நோய்த் தாக்கங்கள் எதுவும் அடையாளம் காட்டப்படாது வெளியேறும் நபர்களுக்கும் நோய் இருக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளது.

வெளிநாடுகளில் இருந்து வருபவர்களில் அதிக பாதிப்புகள் உள்ளதாக கருதப்படும் நாடுகளில் இருந்து வந்தவர்கள் பலருக்கு அண்மைக் காலங்களில் கூட கோவிட் - 19 தாக்கம் உள்ளமை கண்டறியப்பட்டது.

அவர்கள் தவிர்ந்து ஆரோக்கியமாக உள்ளனர் எனக் கருதப்பட்டவர்கள் மீதும் எமக்கு சந்தேகம் உள்ளது. அவர்களுக்கு எந்தவித நோய் தாக்கத்திற்கான அறிகுறிகள் தென்படாது போகலாம், எமது ஆய்வுகளில் அவை வெளிக்காட்டப்படாததாகவும் இருக்கலாம். அவ்வாறு இருப்பவர் மீண்டும் சமூகத்தில் நோயினை பரப்ப வாய்ப்புகள் உள்ளது.

எனவே அனைவரும் மிகவும் அவதானமாக சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளை முழுமையாக பின்பற்றினால் மட்டுமே சமூக பரவலாக கோவிட் - 19 மாறுவதை தடுக்க முடியும்.

அதனை அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஊரடங்கு நீக்கப்படுகின்ற காரணத்தினால் நிலைமைகள் அனைத்துமே வழமைக்கு திரும்பிவிட்டது என்ற நிலைப்பாட்டிற்கு மக்கள் வந்துவிட வேண்டாம் எனவும் அவர் கூறினார். (ம-3)

## நேற்றும் 41 பேரு...


திங்கட்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை ஆயிரத்து 182ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

நேற்று மட்டும் 41 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதுவரை 695 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 10 பேர் உயிரிழந்துள்ளனர். 477 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-3)

# மரண அறிவித்தல்



## சிவச்சந்திரதேவன்

(ஓய்வுபெற்ற வங்கியாளர், வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக ஸ்தாபகர்)

யாழ்ப்பாணம் புலோலி புற்றளையைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டி, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிவச்சந்திரதேவன் 23.05.2020 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயிரவப்பிள்ளை - அன்னம்மாள் தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - கமலினி தம்பதியரின் அன்பு மருமகனும், கிருஷ்ணகுமாரியின் பாசமிகு கணவரும், சஜிஷ்ணவன், சுஹநிதன், ஸைந்தவி, அபீஷ்டகன் ஆகியோரின் நேசத்திற்குரிய தந்தையும், காலஞ்சென்றவர்களான கோப்பெருந்தேவி, சிவசூரியதேவன் மற்றும் சிவஅக்கினிதேவன், சிவசிம்மதேவன், செம்மனச்செல்வி, மெல்லியல் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கிருஷ்ணானந்தம், கிருஷ்ணகுமார், கமலகுமார், கலைவாணி, மதிவதனி, உமா ஆகியோரின் மைத்துனரும், அருந்தவராணி, மனோரஞ்சனி, மாலினி, விபுலானந்தம், காலஞ்சென்ற புஷ்பகுமார, சூரியகுமார் ஆகியோரின் சகலரும், சமாஹிதன், தர்ஜனிஹிதன், ஹம்சப்பிரியா, ராகவி, ஆகியோரின் மாமனாரும், இபவக்ஷன், வத்ஷாங்ஹிதன், சுபான்ஜன், பாகேஷன், ரிஷாபன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.05.2020 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"லக்சி பவனம்" (C-9624) தகவல்: குடும்பத்தினர்
பண்டகை வீதி, உடுப்பிட்டி. 075 563 8468/011 250 7340

# திரையரங்குகள் திறக்க அனுமதிக்கப்படவில்லை

(கொழும்பு)

இன்று ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும், சில வகையான வர்த்தக ஸ்தாபனங்களை திறப்பது தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். அதன்படி உடற்கட்டழகு நிலையங்கள், தியைரங்கங்கள், ஸ்பா என்பன மீளத் திறக்க அனுமதிக்கப்படவில்லை.

இன்று ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் சிகையலங்கார நிலையங்கள், அழகு நிலையங்கள் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட சுகாதார நடைமுறையை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். (ம-3)


## தேவை

நாட் சம்பள அடிப்படையில் வேலையாட்கள் தேவை.

- மாபிள் வேலை தெரிந்தவர்
- மின் இணைப்பாளர்
- குழாய் பொருத்துனர் (பிளம்பர்)

(C-9624)

077 105 6694

மீண்டும்



## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த
எமது சேவை மீண்டும் வழமைபோல்
அனைத்து நாடுகளுக்கும்
100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.

### அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

(C-9600)

### அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்



இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

## காணி விற்பனைக்கு

நாவற்குழிச் சந்தியில் ஏ9 றோட்டிற்கு அருகாமையில் 2 பரப்பு காணியும், கேரதீவு றோட், நாவற்குழியில் 2 1/2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

(C-9621) தொடர்பு : 077 145 6154

## வேலையாட்கள் தேவை

பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் உடனடியாகத் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொழில் சார்ந்த நபர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு : சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

076 635 6560 / 075 055 6560 நெல்லியடி. (C-9619)

## விரைவு பொதிகள் சேவை

### V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய்
- மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(C-9458)

0768226240

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம்,
1988ஆம் ஆண்டு பிறந்த திருவாதிரை நட்சத்திரம், கிரக பாவம் 16 உடைய
சிங்கப்பூரில் வேலை பார்க்கும்
அழகிய மணமகனுக்கு
மணமகள் தேவை.
அரச உத்தியோகம் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு (2870)

076 202 9162


# மரண அறிவித்தல்



## திருமதி அருமைரத்தினம் தெய்வநாயகி

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருமைரத்தினம் தெய்வநாயகி அவர்கள் 24.05.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சன்முகநாதன் - லீலாவதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், அருமைரத்தினத்தின் பாசம் நிறைந்த மனைவியும், மயூரி, அகிலன் (லண்டன்), மஜிதா (ஆசிரியை), அனுதரன், அனுராஜ், அஜந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயக்குமாரின் அன்பு மாமியாரும், டறின்ஸின் அன்பு பேர்த்தியாரும், கௌசலா தேவி, முருகையா, மணிவண்ணன் (லண்டன்), புஸ்பலதா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தருமராசா, திருச்செல்வம், கணேசலிங்கம், ஞானேஸ்வரன், மகேந்திரம், ஜெயராசா, அருளானந்தம், நனேந்திரன், கண்ணன், பாலகுமார், நிமலராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுதர்சினி, சீதா (லண்டன்), சீதாலட்சுமி, ராசாத்தி, ரகுனேஸ்வரி, சூரியகுமாரி, இந்திராணி, நந்தினி, இலங்கேஸ்வரி, ஜெசினா, தீபா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2020) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இணுவில். (C-9620) தகவல் : குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.05.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.